வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 27.04.2022 புதன்கிழமை | இதழ் : 142 | பக்கங்கள் : 16

# தயவு செய்து, நீதியின் மீது உள்ள அன்பினால் உண்மையை ஒரு முறை வெளிப்படுத்துங்கள்!

## இலங்கை அரசிடம் கோருகின்றார் பாப்பரசர்

*வத்திக்கான் சிற்றி, ஏப். 27*

“தயவுசெய்து, நீதியின் மீதுள்ள அன்பினால், உங்கள் மக்கள் மீதான அன்பினால், இந்த நிகழ்வுகளுக்கு யார் காரணம் என்பதை ஒருமுறை தெளிவுபடுத்துங்கள்.”

-இவ்வாறு இலங்கை அரசிடம் கேட்டுக்கொண்டார் பாப்பரசர் பிரான்சிஸ்.

இதுவே ”இது உங்கள் மனசாட்சிக்கும் உங்கள் நாட்டுக்கும் அமைதியைத் தரும்” என்றும் அவர் தெரிவித்தார்.



இலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் பலியானவர்களின் குடும்பத்தினருடன் பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது நெருக்கத்தை வெளிப்படுத்தினார்.

அத்துடன் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணருமாறு இலங்கை அரசை அவர் வலியுறுத்தினார்.

இதுவே நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் என்றும் பாப்பரசர் குறிப்பிட்டார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான

15

# 13ஆவது திருத்தச் சட்டத்தை அப்படியே அமுல் செய்வோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

கொழும்பு, ஏப். 27



அனைத்து ஜனநாயக வழிமுறைகளையும் பின்பற்றி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை அகற்றி, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

15

# உண்மைகளை மறைக்கவில்லை

*கொழும்பு, ஏப். 27*

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளை மறைக்க அரசாங்கம் விரும்பவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பேசிய அவர், உண்மைகளை மறைப்பதன் மூலம் தாம் நமையடைய போவதில்லை எனக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் ஜனாதிபதியுடன் தனிப்பட்ட முறையில் பேசியதாகவும் அமைச்சர் நாலக கொடஹேவா குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் குறித்த தற்போதைய

15

# கோட்டாவுக்கு எதிராக குற்றப் பிரேரணை நிறைவேறுவதற்கு ஒரு வருடம் எடுக்கும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

*கொழும்பு, ஏப். 27*

அரச தலைவருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் ஒரு வருடத்துக்கு மேல் எடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பதவி நீக்கப் பிரேரணை ஊடாக அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்குவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று ருவிட்டர் சமூகவலைத் தளத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதில் அளிக்கும்போது மேலும் தெரிவித்துள்ளதாவது:

15

# நான் பதவி விலகமாட்டேன் அச்சம் கொள்ளவேண்டாம்!

## பிரதமர் மஹிந்த திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 27

“நான் ஒருபோதும் பதவி விலகமாட்டேன். யாரும் அச்சம் கொள்ளவேண்டாம்.” -இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

15

# நீதி அமைச்சராகவும் அலி சப்ரி நியமனம்

*கொழும்பு, ஏப். 27*

நிதியமைச்சர் அலி சப்ரி, மீண்டும் நீதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைய, நேற்றைய தினம் அவர் ஜனாதிபதி மாளிகையில் நீதியமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நிதியமைச்சுக்கு மேலதிகமாக அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

15

# நாட்டின் பொருளாதாரம் மோசம்! வறுமை வீதமும் அதிகரிக்கின்றது!!

## உலக வங்கி சுட்டிக்காட்டு

*கொழும்பு, ஏப். 27*

2019 இல் 10வீதமாக இருந்த இலங்கையின் வறுமை விகிதம் 2022 இல் 11.7வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது

அதிக கடன் அளவுகள் காரணமாக இறக்குமதி சுருக்கம் மற்றும் முதலீட்டாளர்களின் நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் இந்த அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது

உலக வங்கி, தமது தெற்காசியப் பிராந்தியம் தொடர்பான அதன் புதுப்பிப்பில் இதனை தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று நோய் காரணமாக, 2020 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 3.6 சதவிகிதம் சுருங்கியது.

15

# பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் மரணம்!

*வடமராட்சி, ஏப். 27*

முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை இ. போ. ச. பஸ் மோதியதில் பெண்ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் எரிபொருள் நிலையத்துக்கு திருப்ப முற்பட்டபோது பேருந்து மோட்டார் சைக்கிளை மோதியதாகக் கூறப்படுகின்றது.

இதில், வடமராட்சி கிழக்கு -

15

## இப்படியும் நடக்கிறது...!

நாட்டின் அரசியல் நிலைமை நாளுக்கு நாள் ஊகங்களுட னேயே கடந்து கொண்டிருக்கின்றது.

இது ஒரு ஜனநாயக நாடு. இதற்கென்று தனியான அரசியல மைப்பு உண்டு. அதனை மீறி இந்த நாட்டில் எதனையும் செய்ய முடியாது என்று பலதடவை இந்தப் பத்தியில் கூறியாகிவிட்டது.

ஜனாதிபதியை பதவி விலக்கோரி காலிமுகத்திடலில் நடக் கும் தொடர்போராட்டம், வவுனியா நீதிமன்ற வளாகத்திற்கு முன்னால் நடக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளின் போராட்டம்போல தொடரவே செய்யும் என்றும் இந்தப் பத்தியில் இது ஆரம்பிக்கப்பட்ட அன்றே எழுதியிருந்தோம்.

அவர்களின் கோரிக்கை, ஜனாதிபதி வீட்டுக்கு போகவேண் டும் என்பதுதான். அதற்காக அவரது அலுவலகத்திற்கு முன் னால் அவர்கள் போராட்டம் நடத்துவதால் அவர் வீட்டுக்கு போய்த்தான் இருக்கிறார். அதாவது, ஜனாதிபதி மாளிகையை (அதுதானே அவரின் உத்தியோகபூர்வ வீடு) அவர் இப்போது தனது அலுவலகமாக மாற்றித்தான் இருக்கிறார்.

அவர் தனது பதவிக்காலம் முழுவதும், தான் பதவியில் இருப்பேன் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். அவரை வீட்டுக்கு நிரந்தரமாக அனுப்புவதெனில் அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால், அவரை தோற்கடித்து அனுப்புவதன் மூலமே மக்கள் அதனைச் செய்யமுடியும்.

இதேவேளை, இப்போது பிரதமர் மஹிந்த பதவி விலக வேண்டும் என்று - முன்னர் அவரை பதவிக்கு கொண்டுவர 'தலையால் கிடங்கு கிண்டிய' விமல், கம்மன்பில போன்றவர் கள் கோஷம் போடுகின்றனர்.

சஜித் கொண்டுவரும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தாமும் ஆதரித்து, அதனை பாராளுமன்றில் வெற்றிபெறச் செய்வதன் மூலம் மஹிந்த தலைமையிலான அரசை வீட்டுக்கு அனுப்பப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

சஜித் இந்தப் பிரேரணையைக் கொண்டுவருவது, அது வெற்றிபெற்றால் அரசாங்கம் கவிழ்ந்துவிடும், யாரும் ஆட்சிய மைக்க முடியாவிட்டால் பொதுத் தேர்தலுக்கு செல்லலாம் என்ற நோக்கில்தான்.

ஆனால், நம்பிக்கையில்லா பிரேரணையில் சஜித் அணி வெற்றிபெற்றாலும், அந்த பிரேரணைக்கு ஆதரவளித்த உறுப் பினர்களின் உதவியுடன் சஜித் அணி ஆட்சியமைக்க தயாராக இல்லை என்பதையும் திட்டவட்டமாக அது அறிவித்துவிட் டது. அப்படியில்லையெனில், சுயாதீன குழுவாக இயங்கும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் முப்பத்தி ஒன்பது பேரும் ஆட்சியமைக்க விரும்பினாலும், அதற்கு மற்றையவர்களின் அதாவது, அந்தப் பிரேரணைக்கு ஆதரவளித்தவர்களின் ஆதரவு கிடைத்தால் மாத்திரமே அது சாத்தியமாகும். நேற்றுவரை அர சாங்கத்தில் இருந்து அத்தனை குளறுபடிகளுக்கும் காரணமான விமல், கம்மன்பில ஆகியோரின் ஆட்சியை மக்களும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

அவர்களும் இல்லையெனில், அடுத்து என்ன நடக்கும்? சபாநாயகர், மீண்டும் பாராளுமன்றில் பெரிய கட்சியாக இருக் கும் மஹிந்த தரப்பினரையே ஆட்சியமைக்கக் கோரவேண்டும்.

ஆக, இந்தப் பிரச்னை இன்று, நாளை முடியப்போவதாகத் தெரியவில்லை. நாடு இன்று இருக்கும் நிலையில் பொதுத்தேர் தல் ஒன்றை நடத்தக்கூடிய நிலையும் இல்லை என்று தேர்தல் கள் ஆணைக்குழுத் தலைவர் வேறு சொல்லிவிட்டார்.

நாடு இப்படியே அரசியல் ஸ்திரத்தன்மையற்று இருந்து கொண்டிருந்தால், நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேலும் காலதாமதம் ஏற்படுமே தவிர, வேறு எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி எழுதும்போது தான் இன்னுமொரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது.

அந்த நம்பிகையில்லாப் பிரேரணையில் நமது 'தமிழர் தேசம்' அரசியல் தலைவர்கள், அவசரம் அவசரமாக எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகம் சென்று, கையொப்பமிடுகின்ற காட்சியை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அவர்கள் கையொப்பமிட்டது நம்பிகையில்லாப் பிரேர ணைக்கு ஆதரவாக என்பது தெரிந்ததுதான். ஆனால், அதில் எண்ண கேள்வி எழுகின்றது என்றால், இவர்கள் கையொப்பமிட்ட சில தினங்களுக்கு பின்னர்தான், அந்த நம்பிக்கையில்லா பிரேரணை யின் இறுதி வடிவம் தயாரிக்கப்பட்டு முடிந்தது. அப்படியெ னில், பிரேரணையைக்கூட படித்துப் பார்க்காமல் தான் நமது தலைவர்கள் இருவர் வெறும் காகிதத்தில் கையொப் பமிட்டிருக் கின்றார்களா என்ற கேள்வி எழுவதை தவிர்க்கமுடிய வில்லை.

ஏன் இந்த அவசரம் என்று துப்பறிய புறப்பட்டபோதுதான், இந்த விடயம் தெரியவந்தது. தங்களை, 'ராஜபக்ஷக்களின் ஆட் கள்' என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டிலிருந்து விடுபட வேண்டும் என்பது அவர்களின் அவசரத்திற்குக் காரணம் என்பது எவ்வளவு உண்மையானதோ அதேபோல, புலம்பெயர் அணி ஒன்று இந்தக் குற்றச்சாட்டை சுமத்திக்கொண்டு, அவர்க ளுக்கு போட்டியாக மணிவண்ணன் குழுவை வளர்த்தெடுக்க முடிவெடுத்ததும் அவர்களது இந்த அவசரத்திற்கு காரணம் என் கின்றது புலம்பெயர் வட்டாரம் ஒன்று.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரிலேயே இயங் கத் தொடங்கியிருக்கும் மணிவண்ணன் குழுவினரை, அந்த புலம்பெயர் குழுவினரே பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்து, பல சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

கூட்டமைப்பிலிருந்து வெளியேவந்து கஜேந்திரகுமார் எப்படி தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தொடங்கினாரோ, அதேபோல அதிலிருந்து வெளியே போன மணிவண்ணன், தீவிர அரசியலில் இறங்கிய பின்னர், இன்னும் பல காட்சிகளை தமிழ் மக்கள் இனி காணப்போகின்றார்கள்!

- ஊர்க்குருவி






# விடுதலைக்கான புரட்சி யாத்திரை கண்டியில் நேற்று ஆரம்பமானது!

கண்டி, ஏப். 27

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலை மையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக் கள் சக்தியின் கண்டி யிலிருந்து கொழும்பு வரை யான பேரணி நேற்று ஆரம் பமானது.

"விடுதலைக்கான புரட்சி பாத யாத்திரை" என்ற தொனிப் பொருளில் ஆரம்பமான இந்தப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற் றும் பாராளுமன்ற உறுப்பினர் கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக நேற்று காலை 10.30 மணிக்கு தொடங்கிய இந்த பாத யாத்திரை 5 நாட்கள் தொடரவுள்ளது. நேற்று ஆரம் பித்த இந்தப் பாத யாத்திரை பேராதனை வீதியூடாக கடுகண் ணாவையை அடைந்து மாவ னெல்லையில் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில் சிவப்பு சால்வை அணிந்த பெரிய காகத் தின் உருவ பொம்மையும் தொடர்கிறது. (ஐ)

## சமகால கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 27

தொழிற்சங்கங்கள், கூட் டுறவு சங்கங்கள் மற்றும் மக்கள் அமைப்புக்கள் ஏற்பாடு செய் துள்ள "சமகால பெருமந்நெருக் கடி - ஒரு கருத்துப்பகிர்வும் கலந்துரையாடலும்" என்ற நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, யாழ்ப் பாணம் மத்திய கல்லூரிக்கு அருகில் அமைந்திருக்கும் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எவ்வாறு எமது சமூகத்தில் உள்ள பல தரப்பு மக்களைப் பாதிக்கின்றது, இது தொடர்பாக நாம் என்ன செய்ய வேண்டும் போன்ற விடயங்கள் குறித்த கருத்துப் பகிர்வும், கலந் துரையாடல்களும் நடைபெறும்.

இந்த நிகழ்விலே அனை வரும் கலந்துகொள்ள முடியும் என ஏற்பட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (ஐ)

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலதா மாளிகையில் வழிபாடு!

கண்டி, ஏப். 27

கண்டியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகைக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, புத்தரின் புனித தந் தத்தை வழிபட்டு ஆசீர்வா தங் களைப் பெற்றுக்கொண்டார்.

மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் நிகழ்த்தி எதிர்க் கட்சித் தலைவரை ஆசீர்வதித்த னர். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் வரலாற் றுச் சிறப்புமிக்க நாத தேவால யத்துக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அடக்குமுறைமிக்க கொடுங் கோல் அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த ஐக் கிய சக்தி பாத யாத்திரை கண்டி யில் நேற்று ஆரம்பமானது.

இதற்கு முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான ஐக் கிய மக்கள்சக்தியின்பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சமய நிகழ்வுகளில் பங்கேற் றனர். (ஐ)

## சகல கட்சிகளையும் உள்ளடக்கி அமைச்சரவை உருவாகவேண்டும்

### தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஏப்..27

அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கும் வகையில் அமைச் சரவை உருவாக்க வேண்டிய காலம் வந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனூடாக தற்போது நாட் டில் ஏற்பட்டுள்ள பொருளா தார நெருக்கடிக்கு தீர்வு காண முடியுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக் குழு இத னைக் குறிப்பிட்டுள்ளது. (அ)

# தந்தை செல்வாவின் 45ஆம் ஆண்டு நினைவு கிழக்கிலும் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஏப். 27

இலங்கை தமிழரசுக்கட்சி யின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் 45வது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று மட்டக் களப்பு தந்தை செல்வா சதுக் கத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட உபதலை வர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தந்தை செல்வா ஞாபகார்த்த பூங்காவில் இந்த நிகழ்வு நடை பெற்றது. இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளை யின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக் கப்பட்ட இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணா கரம், இரா.சாணக்கியன்,



இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் கி.துரைராசசிங்கம், மட்டக் களப்பு மாநகர முதல்வர் தி.சர வணபவன், பிரதி முதல்வர் க. சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், ரெலோவின் பிரதித்தலைவர் இந்திரகுமார் பிரசன்னா, முன்னாள் மாகா ணசபை உறுப்பினர் மா.நட ராஜா, புளொட்டின் மாவட்டத் தலைவரும், மண்முனை மேற் குப் பிரதேச சபையின் பிரதித் தவிசாளருமான பொ.செல்லத் துரை, இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன், வாலிபர் முன்னணி மட்டக்களப்ப மாவட்ட தலைவர் தீபாகரன், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதித் தவிசா ளர்கள், உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், வாலிபர் முன் னணியினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தந்தை செல் வாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக் கப்பட்டு, மலரஞ்சலியுடன், அகவணக்கமும் செலுத்தப் பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu
27.04.2022 புதன்கிழமை
பிலவ வருடம், சித்திரை 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

## ரணில் விக்கிரமசிங்க?

ரணில் விக்கிரமசிங்க நாட்டின் எதிர்காலம் தொடர்பில், அதிரடியான அறிவிப்புக்களை வெளியிட்டு வருகின்றார். அவரின் அறிவிப்புக்கள் நடந்தால், நாடு பாரதூரமான நெருக்கடிக்குள் விழ நேரிடும். எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில், நாட்டின் தனியார் துறை வீழ்ச்சியடையலாம். அத்துடன், வர்த்தக நடவடிக்கைகள் முடங்கலாம் என்னும் வகையிலான அறிவிப்புக்களை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருக்கின்றார். ரணிலின், எச்சரிக்கைகளை சாதாரணமாக எடுக்க முடியுமா? நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து ஓரளவாவது விடுபடாவிட்டால், ரணிலின் எச்சரிக்கைகள் நிச்சயம் நடக்கக்கூடிய சூழலே காணப்படுகின்றது.

இன்றைய நெருக்கடி நிலையில் பலரும் ரணிலை நோக்கி திரும்புவது போன்ற சூழலும் காணப்படுகின்றது. இவ்வாறான நெருக்கடி நிலையில், ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு திறமையான நபர்தான் தேவையென்னும், அபிப்பிராயம் படித்த சிங்களவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. அத்துடன், இன்றைய சூழலில் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருமுகம் தேவை – அப்படியான ஒருவர் இன்றைய சூழலில் ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் – என்றவாறான அபிப்பிராயம் கொழும்பு புத்திஜீவிகள் மத்தியில் காணப்படுகின்றது.

ஆனாலும் நடைமுறையில் ரணிலை அதிகாரத்திற்குக் கொண்டுவருவது இயலாத காரியமாகவும் இருக்கின்றது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க, கட்சி ரீதியாக மிகவும் பலவீனமாக இருக்கின்றார். அவரிடம், அவருக்கான பாராளுமன்ற உறுப்புரிமை மட்டும்தான் இருக்கின்றது. இந்த நிலையில் ரணில் பொருத்தமானவராக இருந்தாலும்கூட, ரணிலின் மூலம் நாடு நன்மையடையக்கூடிய அரசியல் சூழல் இல்லை. ஆனாலும் ரணில் தொடர்பான அபிப்பிராயங்கள் அவருக்கு சாதகமாகவே இருக்கின்றன.

வேறு வழியில்லாமல் பலரும் தன்னை நோக்கி வர வேண்டுமென்னும் வியூகங்களையும் அவர் வகுக்கக்கூடும். ஏனெனில், ரணில் சாதாரணமாக மதிப்பிடக்கூடிய தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ஒருவரல்ல. மதிநுட்பத்துடன் திட்டங்களை வகுத்து, தனக்கேற்ற சூழலை உருவாக்கக்கூடியவர். எனினும், கட்சி விடயங்களில், சில இறுக்கமான நிலைப்பாடுகளை கொண்டிருப்பதால், அவர் தனக்கான ஆதரவுத் தளத்தை பெருமளவுக்கு இழந்துவிட்டார்.

ஆனாலும், அவரின் திறமை நாட்டுக்கு தேவைப்படுவதால், அவரை நோக்கிப் பலரும், சிந்திக்க முற்படுகின்றனர். அவ்வாறு சிந்திப்பதே ரணிலைப் பொறுத்தவரையில் வெற்றிதான். அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால், ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒருவர் இவ்வாறான சூழலில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தால், சவால்களை வெற்றிகொள்ளக் கூடியதாக இருந்திருக்கும் என்பதை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம்தான். ஏனெனில், சர்வதேச சமூகத்தை அணுகுவது ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலகுவாக இருந்திருக்கும். இன்றிருக்கும் சிங்கள அரசியல்வாதிகளில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு சர்வதேச முகம் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ராஜபக்ஷக்களுக்கு அந்த முகம் இல்லை.

# மீளவும் காலிமுகத்திடல் சத்தியாகிரகம், கண்டி யாத்திரை!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரை இரு வேறு அரசியல் நிகழ்வுகள் மீளவும் ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் நிகழ்வதை அவதானிக்க முடிகின்றது.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே சட்டத்துக்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகள் காலிமுகத்திடலில் நிகழ்த்திய சத்தியாகிரகம், மற்றும் பண்டா- செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டியிலிருந்து கொழும்புக்கு "கண்டி யாத்திரை" மேற்கொண்டமை போன்ற நிகழ்வுகள் என்பவை அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தன.

இந்த நிகழ்வுகள் தற்போது மீளவும் வேறு வடிவில் காலிமுகத்திடல் சத்தியாகிரகமாகவும், கண்டியிலிருந்து கொழும்புக்கான பாத யாத்திரையாகவும் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

அன்று காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம், மறைந்த தமிழ் அரசுக் கட்சி தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் "சிங்களம் மட்டுமே" என்ற அன்றைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சட்டத்துக்கு எதிராக நடத்தப்பட்டிருந்தது.

ஆனால், அன்று காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் பிரதமர் பண்டாரநாயக்காவினால் ஏவிவிடப்பட்ட குண்டர் கூட்டத்தினால் அடிதடியோடு குழப்பப்பட்டது. சத்தியாக்கிரகிகள் பலரும் தாக்கப்பட்டனர்.

வடக்கு - கிக்கு தமிழர்கள் மேற்கொண்ட அஹிம்சைவழிப் போராட்டத்தின் மீது வீழந்த முதலாவது தாக்குதலாகவும் காலிமுகத்திடல் சம்பவத்தைக் கருத முடியும்.

இதன்பின்னர், பண்டா-செல்வா ஒப்பந்தம் இனப்பிரச்னை தீர்வுக்காக கொண்டுவரப்பட்டபோது, அதனை எதிர்த்து 1957ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொழும்பிலிருந்து கண்டிக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தன பாதயாத்திரை சென்றிருந்தார். இதனையடுத்தே அந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டதோடு இலங்கை அரசியலில் இனவாதம் சூடுபிடிப்பதற்கும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் தோல்வியே மூல காரணங்களில் ஒன்றாக விளங்கியிருந்தது.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாக ஒரு தடவை எழுபதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது ஒரு பிரமாண்டமான கூட்டமொன்று முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. அந்தக் கூட்டம் அன்று மட்டக்களப்பின் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த கே .டபிள்யூ. தேவநாயகம் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

ஏராளமானவர்கள் பங்குபற்றியிருந்த அந்தக் கூட்டத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பேச்சு ஆங்கிலத்தில் இடம்பெற்றிருந்தது. அதனை அவரோடு மேடையில் நின்ற ஒருவர் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் அன்று அவரின் அரசியல் வாரிசாகக் கருதப்பட்ட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காமினி திஸநாயக்கவும் நின்றிருந்தார். இக்கூட்டம் எழுபதுகளின் நடுப்பகுதிக்குப் பின்னர் இடம்பெற்றிருந்தது. அப்போது யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் எரிக்கப்படவில்லை. இதனால் காமினி திஸநாயக்க ஓர் இளம் ஐ.தே.க தலைமைத்துவ வாரிசாக நோக்கப்பட்டிருந்தார். ஆனால், அந்த அபிப்பிராயம் யாழ். நூலக அனர்த்தத்துக்குப் பின்னர் தலைகீழாக மாறியிருந்தது.


அந்தக் கூட்டத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தன உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் திடீரென கூட்டத்தவர் மத்தியில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. ஒரு தமிழ் இளைஞன் அந்தக் கூட்டத்தில் திடீரென எழுந்து நின்று " இங்கே எதனையும் பூசி மெழுகிப் பேசாது என்ன காரணத்துக்காக பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக பாதை யாத்திரை சென்று ஒரு தீர்வு முயற்சியை குழப்பினீர்கள்?" என்று குரல் எழுப்பினார். அவரைத் தொடர்ந்து வேறு பல இளைஞர்களும் அதே கேள்வியை ஆக்ரோஷத்தோடு எழுப்பினர்.

இதனையடுத்து ஜே. ஆர். ஜெயவர்த்தன "அமைதியாக இருங்கள் அதற்கான விளக்கத்தை நான் உங்களுக்கு தருகிறேன்", என்று கூறினார். அப்போது நீயும் வேண்டாம். உனது விளக்கமும் வேண்டாம் என்று கூறி கூட்டத்திலிருந்தவர்கள் ஜே. ஆர். நின்றிருந்த மேடையருகே வந்து கூச்சலிட்டனர். அப்போது மேடை அலங்காரங்களும் ஆட்டம் கண்டன. இதனையடுத்து ஜே. ஆரின் மெய்ப்பாதுகாவலர்கள் அவரை பக்குவமாக மேடையிலிருந்து இறக்கி காரில் அழைத்துச் சென்றனர்.

தற்போது பல தசாப்தங்களுக்கு பின்னர் காலிமுகத்திடலில் தென்னிலங்கையர்கள் பதினேழு நாட்களையும் கடந்து இன்றைய அரசுக்கு எதிராக சத்தியாகிரகத்தில் ஈடுபடுவதையும் இந்த சத்தியாகிரகத்துக்கு ஆதரவளிக்கும் விதத்தில் கண்டியிலிருந்து கொழும்பு வரை பாதயாத்திரை ஒன்று நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளதையும் நோக்கும்போது தமிழ் அரசியலாளர்களே காலிமுகத்திடல் சத்தியாகிரகத்தின் முன்னோடிகளென்பதையும், மறுபுறத்தே ஒரு நேர்த்தியான அரசியல் தீர்வை தமிழர்களுக்கு எதிராக வழங்க எதிர்ப்புத் தெரிவித்தே 1957ஆம் ஆண்டு கண்டி யாத்திரை முதலில் மேற்கொளப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது.

எனவே, தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டு தேசிய நீரோட்டத்தில் அவர்களுக்குரிய இடம் வழங்கப்பட்டிருந்தால் அவர்கள் இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் பொருளாதார ரீதியாக மேம்பட்ட பங்களிப்பை வழங்கியிருப்பதுபோல இலங்கையிலும் தமது பங்களிப்பை வழங்கியிருப்பர். ஆனால், "தன்வினை தன்னைச்சுடும்" என்பது போல இலங்கையில் கடந்த காலங்களில் அரசியல், பொருளாதார ரீதியாக விடப்பட்ட தவறுகளே தற்போது பூதாகார பொருளாதார பிரச்னைகளுக்கும் அடிகோலியுள்ளது எனலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சிக்கனம் தேவை. புதிய விஷயங்களை கற்றுக் கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும். வேலையில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உடல்நலக் குறைவு முழுமையாக சரியாகும். நிம்மதி பிறக்கும்.

**இடபம்**
நீங்கள் மதிக்கும் நபர் ஒருவர் உங்களைப் பாராட்டுவார். சுபச்செலவு ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மனதில் உற்சாகம் பிறக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தின் சூழ்நிலை அறிந்து செயல்படுவீர்கள். உங்களின் முயற்சியால் நன்மை கிடைக்கும். நிதிநிலை கூடும். மேலதிகாரி பணியிடத்தில் உங்களைப் பாராட்டி பேசுவார்.

**கடகம்**
பேசும் போது மிகவும் கவனமாயிருங்கள். நட்பு வட்டம் விரியும். மற்றவர்களுக்காக அனுசரித்து செல்வீர்கள். பிறரை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். அழகும், அறிவும் கூடும். பெரியோரின் ஆசி கிடைக்கும்.

**சிம்மம்**
தள்ளிப்போன பயணத்தைத் தொடர்வது பற்றி யோசிப்பீர்கள். சுறுசுறுப்புடன் செயல்பட்டு தேங்கியிருந்த பணிகளை முடிப்பீர்கள். குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கன்னி**
வியப்புக்குரிய செயல் செய்து அனைவராலும் பாராட்டப்பெறுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் கூடும். எடுத்த செயல் அனைத்தும் வெற்றியாகும். பிறருடைய நட்பு நன்மை தரும். நிதி நிலை உயரும்.

**துலாம்**
புதிய விஷயங்களை மற்றவர்களுக்கு கற்றுத் தருவீர்கள். நேற்றைய பிரச்னையில் இருந்து மீளுவதற்கு அமைதியை கையாளுவீர்கள். சகோதரர்கள் நன்மை செய்வர். உடல் நலன் மேம்படும்.

**விருட்சிகம்**
வாகன பழுது நீக்கம் செய்வீர்கள். இன்று சுறுசுறுப்பான நாள். பள்ளி மாணவர்களுக்கு உதவுவீர்கள். நட்பால் நன்மை ஏற்படும். முயற்சியில் வெற்றி பெற விவேகத்துடன் செயல்படுவீர்கள்.

**தனுசு**
வாழ்வில் நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நிகழும். பிறருடன் தேவையற்ற கருத்து வேறுபாடு வேண்டாம். குடும்பத்தில் நீண்ட நாளாக இருந்து வந்த கவலை நீங்கும்.

**மகரம்**
சுபச்செலவால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தேவையற்ற பயம் வேண்டாம். பணியில் கவனம் தேவை. பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். நிதி நிலை மேம்படும்.

**கும்பம்**
பிறரின் பாராட்டை நம்பி வியப்படைய வேண்டாம். எந்த செயலிலும் நிதானத்தை கடைப்பிடிப்பதால் முன்னேற்றம் கூடும். அக்கம்பக்கத்தினரிடம் நல்ல பெயரை வாங்குவீர்கள்.

**மீனம்**
சமீபத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் மனதில் இருந்து அகலும் நாள். உங்களுக்கென்று ஒரு ரசிகர் கூட்டம் உருவாகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

# தமிழகம் வரும் ஈழத்து அகதிகளை கைது செய்வது கண்டனத்துக்குரியது

## நாம் தமிழர் கட்சி சீமான்



சென்னை, ஏப். 27

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தாளாது, தமிழகம் வரும் ஈழச்சொந்தங்களை கைது செய்வது கடும் கண்டனத்திற்குரியது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவால் அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச் செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது. வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகின்ற செய்திகள் கவலையளிக்கின்றன.

சிங்கள இனவெறி பிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக் குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இன வெறி செயல்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணம். எனினும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்து பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மனவேதனையைத் தருகிறது.

இவ்வளவு ஆண்டுகளாக, சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்திற்கு ஆளாகி நின்ற தமிழ் சொந்தங்கள், இப்போது பொருளாதார நெருக்கடியாலும், வறுமையின் கோரப்பிடியினாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில், நாளும் அல்லல்பட்டு வருவது பெரும் மன வலியைத் தருகிறது.

இத்தகைய கையறு நிலையில், தாய்த் தமிழகத்தில் தஞ்சம்கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச் சொந்தங்களை வழக்குகள் போட்டு கைது செய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அனைத்தையும் இழந்து வரும் நம் மக்களை ஆரத்தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக்கும் செய்துகொடுத்து, அவர்களைக் காக்க முன்வர வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# பாக்கு நீரிணையை நீந்தி கடந்தவருக்கு பாராட்டு!



சென்னை, ஏப். 27


இந்தியா - இலங்கை இடையே உள்ள பாக்கு நீரிணையை இரு முறை நீந்தி சாதனை படைத்த மாணவன் முதல்வரிடம் வாழ்த்துப் பெற்றார்.

இந்தியா - இலங்கை இடையே உள்ள பாக்கு நீரிணையை தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரையிலும், மீண்டும் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலும் உள்ள 60 கி.மீ. தூரத்தை 19 மணி 45 நிமிடங்களில் கடந்த முதல் இந்தியர் என்ற சாதனையை 8ஆம் வகுப்பு மாணவன் நீ.சினேகன் அண்மையில் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழக அரசின் விழாவாகிறது கருணாநிதியின் பிறந்தநாள்!

சென்னை, ஏப். 27

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



தமிழகத்தில் ஐந்து முறை முதல்வராகவும் 13 முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்த கருணாநிதி செய்த சாதனைகளை பட்டியலிட்டு, முதல்வர் மு.க. ஸ்டாலின் பேரவையில் உரையாற்றினார். இதன்போதே, கருணாநிதியின் பிறந்தநாளான ஜூன் 3ஆம் தேதி இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும். சென்னை அண்ணா சாலையில் உள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கருணாநிதிக்கு சிலை நிறுவப்படும். அண்ணா மற்றும் பெரியார் சிலைகளுக்கு நடுவே கருணாநிதி சிலை அமைக்கப்படும் என்றும் கூறினார். (ஐ)

# தொற்றைத் தடுக்க சகலருக்கும் தடுப்பூசி

சென்னை, ஏப். 27

“நாம் அனைவரும் எந்தவொரு சூழலையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதுடன், தகுதியான அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்”, என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது. இந் நிலையில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை நடத்தியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

தமிழகத்தில் தடுப்பூசி செலுத்த தகுதியுள்ள 6.33 கோடி பேரில், 74.75 சதவீதம் பேருக்கு இரண்டு தவணை தடுப்பூசிகளும் செலுத்தப் பட்டுள்ளன.

ஒமைக்ரோன் வைரஸால் ஏற்பட்ட 3ஆவது அலையின் தாக்கம் பெருமளவில் இல்லை. இதனால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை சிறிதளவு உயர்ந்தாலும் கூட, இந்தத் தொற்று கடும் நோயையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்த வில்லை. இவ்வாறு நாம் அனைவரும் இணைந்து எடுத்த முயற்சிகளால் கொரோனா தாக்கத்தில் இருந்து வெளிவந்து இயல்பு வாழ்க்கைக்கு நாம் திரும்பி வருகிறோம். மக்களின் வாழ்வாதாரமும் படிப் படியாக உயர்ந்து வருகிறது.

இந்த சூழலில், மீண்டும் தொற்று அதிகரிக்கிறது. நாம் அனைவரும் எந்த ஒரு சூழலையும் எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

இந்த பெருந்தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்த நம்மிடம் உள்ள ஆயுதம் தடுப்பூசியாகும். தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்வதே நமது தலையாய கடமையாகும் - என்றார். (ஐ)



# அமைச்சரவை பேச்சாளர்களாக மூவர்!

கொழும்பு, ஏப். 27

ஊடகத்துறை அமைச்சர் நாலக்க கொடஹேவ, கல்வி மற்றும் பெருந்தோட்ட துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் எரிசக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகியோர் அமைச்சரவையின் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூவரும் அமைச்சரவையின் உப பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் நாலக்க கொடஹேவ தெரிவித்தார். (அ)

# மின் கட்டணம் உயரும்?

கொழும்பு, ஏப். 27

மின்சாரக் கட்டணத்தை 100 வீதத்தினால் அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தயாராகவுள்ளதாக அறியமுடிந்தது. (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணையை 3 ஆம் திகதி கையளிக்கத் திட்டம்!

## 4 ஆம் திகதியன்று பலப்பரீட்சை

கொழும்பு, ஏப். 27

**அரசு பதவி விலகாவிடின் எதிர்வரும் 03 ஆம் திகதி சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் அரசுக்கான ஆதரவை பரீசிலித்து பார்ப்பதற்காக எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறும் பிரதிச் சபாநாயகருக்கான தேர்வில் 11 கட்சிகளின் சார்பிலும் வேட்பாளராக ஒருவரை நிறுத்தவும் திட்டமிட்டப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் சர்வக்கட்சி இடைக்கால அரசு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்கும், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் 11 கட்சிகளின் கூட்டணிக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஓரணியில் திரண்டு ஆதரிப்பதற்கு இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டாலும், இடைக்கால சர்வக்கட்சி அரசு அமைப்பது சம்பந்தமாக இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, கயந்த கருணாதிலக்க மற்றும் எஸ்.எம். மரிக்கார் ஆகியோரும், சுயாதீன அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, தயாசிறி ஜயசேகர , டிரான் அலஸ் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். கொழும்பிலுள்ள டிரான் அலஸின் அலுவலகத்திலேயே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உள்ளடக்கங்கள் பற்றியும், மேலதிகமாக உள்வாங்கக் கூடிய விடயங்கள் சம்பந்தமாகவும் முதலில் ஆராயப்பட்டுள்ளன.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தற்போதுவரை 115 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதாகவும், அரசு பதவி விலகாவிடின் எதிர்வரும் 03 ஆம் திகதி சபாநாயகரிடம் அப்பிரேரணை கையளிக்கப்படும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கூட்டத்தில் எடுத்துரைத்தனர்.

“அரசுக்கான ஆதரவையும் நாம் பரீசிலித்து பார்க்க வேண்டும், எனவே எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறும் பிரதி சபாநாயகருக்கான தேர்வில் 11 கட்சிகளின் சார்பிலும் வேட்பாளராக ஒருவரை நிறுத்த திட்டமிட்டுள்ளோம்.” - என்று சுயாதீன அணிகளின் உறுப்பினர்கள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர் முன்மொழியப்படுமானால் இரகசிய வாக்கெடுப்பு மூலமே தேர்வு நடக்கும். அன்றைய தினம் இரு தரப்புக்கும் பலப்பரீட்சையாக அமையும். இத்தேர்வில் ஆளுங்கட்சி வேட்பாளர் மண் கவ்வினால் அது அரசுக்கு பெரும் பின்னடைவாக அமையும்.

அடுத்ததாக சர்வகட்சி இடைக்கால அரசு பற்றியும் பேசப்பட்டது. ராஜபக்ஷக்கள் அல்லாத அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மொட்டு கட்சி உறுப்பினர் ஒருவரே பிரதமராக தெரிவாக வேண்டும், கட்சித் தலைவர்களின் பொது இணக்கப்பாட்டுடன் பிரதமரை தெரிவு செய்ய வேண்டும் என சுயாதீன உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சர்வகட்சி அரசில் இணைவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுக்கவில்லை எனவும், வெளியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்குவது பற்றியும் ஆராயப்படுகின்றது எனவும் சஜித் அணி சார்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இடைக்கால அரசு அமைந்தால் நிச்சயம் மூன்று விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விடயத்தையும் சஜித் அணி பட்டியலிட்டு காட்டியுள்ளது.

1. இடைக்கால அரசு அமைந்த கையோடு 21 ஐ அமுல்படுத்துதல்

2. நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தீர்க்க விசேட பொறிமுறையை ஏற்படுத்தல்.

3. அரசியல் ஸ்தீரத்தன்மை ஏற்பட்டு, பொருளாதார நெருக்கடி தீர்ந்த கையோடு புதிய அரசை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை மக்களுக்கு வழங்க வேண்டும். அதாவது பொதுத் தேர்தக்கு செல்ல வேண்டும்.

மேற்படி மூன்று விடயங்களுக்கு சுயாதீன அணிகளின் சார்பில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது. இடைக்கால அரசு அமைப்பது பற்றி தொடர்ந்தும் பேசவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ)




# அமெரிக்க தூதுவர் ஜூலி சங் முகமாலை பகுதிக்கு விஜயம்

## கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர் நேற்றுக் காலை முகமாலைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.45 மணியளவில் முகமாலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டார்.

முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயல்பாட்டில் ஈடுபட்டு வரும் டாஸ் நிறுவனத்தினால் அகற்றப்பட்ட கண்ணிவெடிகளையும் இதன்போது அமெரிக்கத் தூதுவர் பார்வையிட்டார்.

இதன்போது அங்கு கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுடன் உரையாடியதுடன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து வாக்குறுதி வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது. (அ)

# அத்தியாவசிய மருந்து வகை இன்று நாட்டுக்கு வந்துசேரும்

கொழும்பு, ஏப். 27

நாட்டுக்கு அவசியமான அத்தியாவசியமான மருந்துப் பொருட்களுடனான கப்பல் இன்று புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளது.

இந்தியாவின் கடனுதவியின் கீழ் 101 வகையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இலங்கை பெற்றுக்கொள்ள இருப்பதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமண அறிவித்திருந்தார்.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் கருத்து தெரிவிக்கையில்-

மருந்துப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், அவற்றை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு சுமார் 100 நாட்கள் வரை செல்லும். அதுவரை இந்தியக் கடன் வசதியின் கீழ் மருந்து விநியோகம் தொடரும்-என்றார். (அ)

# கோட்டாபய அரசுக்கு எதிராக வாக்களிக்காது வரவேண்டாம்

## காலி மாவட்ட எம்.பிக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27

கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காது வரவேண்டாம் என காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களை தாங்கியவாறு குறித்த பதாகை காலி மாவட்ட பொதுமக்கள் சார்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

காலி மாவட்ட மக்களால் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடும் பதாகை சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.(அ)



## தந்தை செல்வாவின் நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், ஓய்வு நிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுத் தலைவருமான கலாநிதி கு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நினைவுத் தூவிக்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர் கள், தமிழரசுக் கட்சி உறுப் பினர்கள் சிவில் சமூக உறுப்பி னர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத் தினர். (அ)

# அமைச்சரவையின் ஊடாகவே 21ஆவது திருத்தம் முன்னெடுப்பு

### சபாநாயகர் மஹிந்த யாப்பா திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 27

**தனிநபர் பிரேரணையை விட அமைச்சரவை ஊடாக மேற்கொள்வதே 21 ஆவது திருத்தத்தை முன்னெடுப்பதற்கான துரிதமான வழியென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் என்ற போதும் அரசமைப்பை மீறக்கூடிய எதனையும் மேற்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்துக்கு பதில் அனுப்பியுள்ள அவர்,

நாட்டுமக்களின் பிரதான கோரிக்கையான அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கம் மற்றும் விஜேதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட 40 எம்.பிகள் முன்வைத்த யோசனை தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்தில் சட்டமா அதிபர் உள்ளிட்ட நீதிபதிகள் குழுவும் பங்கேற்றது. என்னிடம் கையளிக்கப்பட்ட 21 ஆவது திருத்த யோசனையை அதே தினம் பிரதமருக்கும் அமைச்சரவை செயலாளருக்கும் சட்டமா அதிபருக்கும் அனுப்பிவைத்தேன். குறித்த யோசனை அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட இருந்ததாக அறிந்தேன்.

அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய அதனை சட்டமா அதிபருக்கு முன்வைப்பது அமைச்சரவைச் செயலாளரின் பொறுப்பாகும். தற்பொழுது அமுலிலுள்ள நாட்டின் சட்டத்திற்கு அமைய இந்த நடைமுறைதான் வேகமாக மேற்கொள்ளக் கூடிய முன்னெடுப்பாகும்.

தனிநபர் பிரேரணையாக முன்வைக்கும் செயல்பாடு காலம் பிடிக்கும்.

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் என்ற போதும் அரசியலமைப்பை மீறக்கூடிய எதனையும் எனக்கு மேற்கொள்ள முடியாது.

28 ஆம் திகதி மற்றொரு கட்சித் தலைவர் கூட்டம் நடைபெற உள்ளது என்பதையும் நினைவுபடுத்துகிறேன்- என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மே 6 ஆம் திகதி நாடு முற்றாக முடங்கும்!

கொழும்பு, ஏப். 27

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் ஹர்த்தால் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஒன்றிணைந்த அத்தியாவசிய சேவை சங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வலியுறுத்தி இந்த ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 28ஆம் திகதி பல அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இந்த விடயத்தை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அறிவித்தார்.

அத்துடன் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் ரயில்வே தொழிற்சங்கங்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் 27ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 28ஆம் திகதி நள்ளிரவு வரை இவ்வாறு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு பிரதான தொழிற்சங்கள் பலவும் தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மகாநாயக்க தேரர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை அமுல்படுத்தாவிட்டால் அடுத்த வாரம் நாடு தழுவிய ரீதியில் பஸ் சேவை புறக்கணிப்பை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரித்துள்ளார்.

நடப்பு அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை மீட்பதற்கான சரியான திட்டம் எதுவும் இல்லாத நிலையில், அரசாங்கத்தை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை. இதனால் ஏனைய துறைகளை போன்று பஸ் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வாரத்தில் ஏனைய சங்கங்களுடன் பேச்சு நடத்தி தீர்மானத்தை நிறைவேற்றவுள்ளதாக கெமுனு விஜேரத்ன சுட்டிக்காட்டினார். (அ)

### 2 வாரங்களுக்கு ஒரு தடவை மருந்து விலைகளில் திருத்தம்

கொழும்பு, ஏப். 27

இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருந்துகளின் விலைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர், பேராசிரியர் சன்ன ஜயசுமன அறிவித்துள்ளார்.

குறித்த சந்தர்ப்பங்களில் காணப்படும் டொலரொன்றின் பெறுமதிக்கமைய இந்த திருத்தங்கள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்துகளின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நாம் ஒரு போதும் இணங்குவதில்லை.

டொலரொன்றின் பெறுமதிக்கு நிகராக விலைகளை திருத்தியமைத்து, நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (அ)



## மஹிந்த வீடு முன் ‘மைனா கோ கம’

கொழும்பு, ஏப். 27

‘கோட்டா கோ கம’வுக்கு பிறகு இலங்கையில் மற்றொரு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபடுபவர்களால் இது உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவி விலகவேண்டும் எனக் கோரி கடந்த 3 தினங்களான அலரி மாளிகைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த போராட்டகார்கள் அருகில் தற்காலிக கூடாரங்களை அமைந்துள்ளதுடன் அதற்கு மைனா கோ கம (கிராமம்) என பெயரிட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி, கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரில் கடந்த 19 நாட்களாக போராட்டம் நடத்தப்பட்டு வருவதுடன் அந்த இடத்துக்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் ஏற்கனவே கோட்டா கோ கம (கிராமம்) என பெயரிடப்பட்டுள்ளனர்.

அலரி மாளிகைக்கு எதிரில் நடத்தப்படும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் உத்தரவை பெற கொள்ளுப்பிட்டி பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தனர்.

எனினும் அவ்வாறான உத்தரவை பிறப்பிக்க நீதிமன்றம் மறுத்து விட்டது. எனினும் ஏதேனும் கலவரமான சம்பவங்கள் நடந்தால், பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியும் என நீதிமன்றம் கூறியிருந்தது. (அ)

## மின்சாரக் கட்டண அதிகரிப்பு; மின்சக்தி அமைச்சர் விளக்கம்!

கொழும்பு, ஏப். 27

மின்சார கட்டணத்தை 100 வீதத்தினால் அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ள நிலையில் அது தொடர்பில் மின்சக்தி அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட கட்டண திருத்தங்கள் தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

எனினும், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி அளிப்பதானது, முதல் தடவை அல்ல என்றும், கட்டண திருத்தங்களுக்கான கோரிக்கை 2015 முதல் பலமுறை முன்வைக்கப்பட்டது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனை நடைமுறைப் படுத்தவோ, திருத்தவோ அல்லது பிரேரணையை நிராகரிக்கவோ அமைச்சரவைக்கு அதிகாரம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய மின்சாரக் கட்டணத்தை திருத்தும் கோரிக்கை தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் கூறினார். (அ)



# 40 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

கிளிநொச்சி, ஏப். 27

இரவு சுற்றுக்காவல் ஈடு பட்ட பொலிஸாருக்கு கிடைக் கப்பெற்ற தகவலுக்கு அமைய நெத்தலி ஆற்றுப் பகுதியிலி ருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக் கிளில் இரண்டு சந்தேக நபர்கள் மறைத்து எடுத்து சென்ற 40 லீற்றர் கசிப்பை பொலிஸார் மீட்டுள்ளதுடன் இருவரையும் கைது செய்தனர்.

புதுக்குடியிருப்பு நோக்கிக் கொண்டு சென்ற சமயம் இரவு காவல் கடமையிலிடுபட்ட பொலிஸாரின் வீதிச் சோதனை யில் இவர்களிடம் இருந்து 40 லீற்றர் கசிப்பு மற்றும் எடுத்துச் செல்வதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம் சது ரங்க தெரிவித்தார். (அ-02)

# பொதுத் தேர்தல் நடத்தினால் 1000 கோடி ரூபா செலவாகும்

## நிமால் புஞ்சிஹேவா எச்சரிக்கை



**கொழும்பு, ஏப். 27**

**பாராளுமன்றை கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தினால் சுமார் ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என தேர்தல் ஆணைக் குழு வின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.**

நாட்டின் பொருளாதார நிலைமைகளினால் தற்போது தேர்தல் ஒன்றுக்கு செல்வது பொருத்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

பாராளுமன்றின் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து குறு கிய காலத்திற்கேனும் இடைக் கால அரசாங்கமொன்றை நிறுவி ஆட்சி செய்து பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்ல முடியும்.

தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டுமாயின் நான்கு மாத கால அவகாசம் தேவைப்படும்.

அதற்கு முன்னர் எரிவாயு, எரிபொருள் மற்றும் மின் வெட்டு பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

தேர்தலுக்கு செலவிடும் பணத்தை இந்தப் பிரச்னை களை தீர்க்க பயன்படுத்திக் கொள்ள முடியும்-என்றார். (அ)

# எரிபொருள் விலை திருத்தத்துக்கு மீண்டும் வரும் விலைச் சூத்திரம்!

கொழும்பு, ஏப். 27

எரிபொருள் விலையில் திருத் தம் எதிர்காலத்தில் விலைச் சூத் திரத்தின் கீழ் மேற்கொள்ளப்ப டும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

டொலருக்கு நிகரான எரி பொருள் விலையினால் அரசாங் கம் தற்போது நட்டத்தை எதிர் நோக்குகிறது.

விலை அதிகரிக்கப்பட்டபோதிலும், நிதியமைச்சினால் விதிக்கப்ப டும் வரிகள் நீங்கலாக 92 ஒக் ரேன் பெற்றோலினால் 13.38 ரூபா நட்டம் ஏற்படுகிறது.

அத்துடன் 95 ஒக்ரேன் பெற்றோலினால் 3.28 ரூபா, லங்கா ஓட்டோ டீசலினால் 68.79 ரூபா, லங்கா சுப்பர் டீசலினால் 67.46 ரூபா மற்றும் மண்ணெண்ணெய்யினால் 232.33 ரூபாவும் நட்டம் ஏற்படு கிறது-என்றார். (அ)

# 350 ரூபாவை தொடவுள்ள டொலரின் பெறுமதி

கொழும்பு, ஏப். 27

அமெரிக்க டொலருக்கு நிக ரான இலங்கை ரூபாவின் பெறு மதி தொடர்ந்தும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

இதன்படி, உரிமம் பெற்ற இலங்கையின் சில வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொல ரொன்றின் விற்பனை விலை யானது 348 ரூபாவாக பதிவா கியுள்ளது.

அதேவேளை அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் விலையானது சில வங்கிகளில் 338 ரூபாவாகவும், இன்னும் சில வங்கிகளில் 333 ரூபாவா கவும் பதிவாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)



# ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்காக பொலிஸாருக்கு புதிய உபகரணங்கள்

கொழும்பு, ஏப். 27

நாடு தழுவிய ரீதியில் அர சாங்கத்திற்கு எதிராக மக்கள் முன்னெடுக்கும் போராட்டங் களை கட்டுப்படுத்த பொலிஸ ாருக்கு புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போராட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெறும் பகுதிகளில் பாதுகாப் புப் பணியில் ஈடுபடுத்தப்பட் டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு புதிய உபகரணங்கள் வழங்கப் பட்டமை தொடர்பான புகைப் படங்கள் சமூக வலைத்தளங் களில் பகிரப்பட்டு வருகின்றன.

கண்ணீர்ப் புகையில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு புதிய ஹெல்மெட், தடியடி நடத்தும் தடி, கண்ணீர்ப் புகை மற்றும் முகக் கவசங்கள் வழங் கப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரிகள் புதிய உபகரணங்களின் அட்டைகளை அகற்றி அவற்றைப் பயன்படுத் துவதைக் காட்டும் புகைப்படங் களை சமூக ஊடகங்களில் வெளி யிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த புதிய சாதனங்கள் அனைத்தும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ் நிலை காரணமாக பாவனையில் இல்லாத இந்தக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

அதற்கமைய, புதிய உபகர ணங்கள் எதுவும் இறக்குமதி செய்யப்படவில்லை என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

எனினும் நாட்டில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்க டிக்கு மத்தியில் இந்தப் பொருட் கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக, பலரும் குற்றம் சாட்டியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

# இரவில் திடீரென கூடிய ராஜபக்ஷ சகோதரர்கள்!

கொழும்பு, ஏப். 27

ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக நாடளாவிய எழுச்சி, நாட்டில் ஏற்பட்டுள்ள அரசி யல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களுக்கு இடையி லான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இரவு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற் றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியுடன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜ பக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண் டனர் என தெரிவிக்கப்படு கின்றது.

நாட்டில் நிலவும் பாரிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங்கத் திற்கு எதிரான மக்கள் போராட் டம் தொடர்பிலும் இதில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை நீடித்ததாக தெரியவரு கிறது. (அ)

# சர்வதேச கடன் தரப்படுத்தலில் மேலும் கீழ் இறங்கிய இலங்கை

கொழும்பு, ஏப். 27

சர்வதேச கடன் தரப்படுத்த நிறுவனமான ஸ்டேன்டர்ட் என்ட் புவர்ஸ் (S&P) நிறுவனம் இலங்கையை கடன் தரப்படுத்த லில் மேலும் கீழ் நோக்கி தரப்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் சி.சி. (CC) நிலையில் இருந்து "தெரிவு செய்யப்பட்ட இயல்பு நிலை" (Selective Default) வரை இலங் கையை கீழ் நோக்கி தரப்படுத் தியுள்ளதாக சர்வதேச ஊடகங் கள் தெரிவித்துள்ளன.

30 நாட்களுக்கு பின்னர், 2033 -2028 காலப் பகுதியில் முதிர்ச்சியடைய உள்ள இறை யாண்மை பிணை முறிப் பத்தி ரங்களுக்கான வட்டியை செலுத்துவதை தவிர்த்துள்ள தன் அடிப்படையில், டி மட் டம் வரை கீழ் நோக்கி தரப் படுத்தப்பட்டுள்ளது.

குறித்த காலப் பகுதியில் இலங்கை அரசு இந்த வட்டி களை செலுத்தி விடும் என எதிர்பார்க்க முடியாது என ஸ்டேன்டர்ட் என்ட் புவர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதியில் இருந்து பிச் ரேட்டிங்ஸ், ஸ்டேன்டர்ட் என்ட் புவர்ஸ் ஆகிய சர்வதேச கடன் தரப் படுத்தல் நிறுவனங்கள் இலங் கையை எதிர்மறையாக கீழ் நோக்கி தரப்படுத்த ஆரம்பித் தன.

ஸ்டேன்டர்ட் என்ட் புவர்ஸ் நிறுவனம் இலங்கை தொடர் பாக மேற்கொண்டுள்ள தரப்ப டுத்தல், இலங்கை வரலாற்றில் மிகவும் கீழ் மட்டத்தை நோக் கிய தரப்படுத்தலாகும்.

"Selective Default" என்பது ஒரு இறையாண்மையுள்ள நாடு அதன் நிதி கடன்களை திரும்ப செலுத்துவதை தாமதப்படுத்த மேற்கொள்ளும் தெரிவுவின் போது ஏற்படும் நிலைமையை குறிக்கின்றது. (அ)

ஈழநாடு



# இமானுவேல் மக்ரோன்:

## இரண்டாவது முறையாக பிரான்ஸ் அதிபராகிறார்

## வலதுசாரி வேட்பாளரை தோற்கடித்தார்

**- பிரான்ஸிலிருந்து பால் கிர்பி**

பிரான்ஸ் அதிபராக தொடர்ந்து இரண்டாவது முறையாக பெரும் வெற்றி பெற்றுள்ளார் இமானுவேல் மக்ரோன். தனக்கு எதிராகப் போட்டியிட்ட தீவிர வலதுசாரி வேட்பாளர் மெரைன் லீ பென்னை அவர் தோற்கடித்துள்ளார். தீவிர வலதுசாரி தலைவர்கள் இதுவரை தேர்தல்களில் பெற்ற வாக்குகளை விட அதிகமான வாக்குகளை லீ பென் பெற்றபோதிலும் அவர் அதிபர் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.



இத்தேர்தலில் இமானுவேல் மக்ரோன் எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகமாக 58.55 சதவீத வாக்குகளையும் லீ பென் 41.45 சதவீத வாக்குகளையும் பெற்றனர். தன்னுடைய வெற்றிக்குப் பிறகு ஈபிள் டவர் அருகே தன் ஆதரவாளர்களிடையே உரையாற்றிய மையவாத தலைவரான இமானுவேல் மக்ரோன், தேர்தல் தற்போது முடிவடைந்துள்ளதாகவும், தான் "அனைவருக்குமான அதிபராக இருப்பேன்" எனவும் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளில் இரண்டாவது முறையாக தொடர்ந்து அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அதிபர் இமானுவேல் மக்ரோன் தான்.

தோல்வியை தழுவினாலும், தான் பெற்ற குறிப்பிடத்தக்க வாக்கு சதவீதம் வெற்றியை குறிப்பதாக, 53 வயதான லீ பென் தெரிவித்துள்ளார்.

### 8 முறையாக தோற்ற லீ பென்

தான் நடத்திய தேசிய பேரணியில் முன்னெடுக்கப்பட்ட கருத்துகள் புதிய உயரத்தை எட்டியதாக, தன் ஆதரவாளர்களிடையே உரையாற்றிய லீ பென் தெரிவித்தார். ஆனால், தீவிர வலது போட்டியாளரான எரிக் ஸிம்மோர், தன்னுடைய தந்தையை போலவே லீ பென் பெரும் தோல்வியை சந்தித்துள்ளதாக தெரிவித்தார். "தோல்வி பட்டியலில் லீ பென் பெயர் இடம்பெறுவது இது எட்டாவது முறை" என அவர் தெரிவித்தார்.

தன்னுடைய தந்தை ஜேன் - மேரி லீ பென் நிறுவிய கட்சியை வழிநடத்தும் பொறுப்பை 2011 ஆம் ஆண்டில் மெரைன் லீ பென் பெற்றார். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரான்ஸ் அதிபர் தேர்தலில் 1 கோடியே 30 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றார் இவர்.

பிரான்ஸில் அதிகமான வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்காக வரி நீக்கம், பொது இடங்களில் முஸ்லிம்கள் முக்காடு அணிவதற்கு தடை, வெளிநாடுகளிலிருந்து பிரான்ஸில் குடியேறுபவர்கள் மீதான கட்டுப்பாடுகளுக்கான வாக்கெடுப்பு ஆகியவற்றை லீ பென் முன்வைத்தார்.

### "பதில்கள் கண்டறியப்படவேண்டும்"

"நம்முடைய குடிமக்கள் பெரும் எண்ணிக்கையில் தீவிர வலதுசாரிக்கு வாக்களித்ததற்கான கோபம் மற்றும் கருத்து வேறுபாடுகளுக்கான பதில்கள் கண்டறியப்பட வேண்டும்," என தன்னுடைய வெற்றி உரையில் மக்ரோன் தெரிவித்தார். "இதனை கண்டறிவது என்னுடைய மற்றும் என்னை சுற்றியிருப்பவர்களின் கடமையாகும்" என அவர் தெரிவித்தார்.




மூன்று வாக்காளர்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்காளர்கள், எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்கவில்லை. தேர்தலில் வாக்களித்தவர்கள் எண்ணிக்கை 72 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. இது 1969-க்குப் பின்னான தேர்தல்களில் பதிவானதில் குறைவான வாக்கு சதவீதமாகும். மேலும், 30 லட்சத்திற்கும் அதிகமானோர் செல்லாத வாக்குகளை செலுத்தியுள்ளனர்.

### குறைவான வாக்குப்பதிவு

தேர்தல் நடைபெற்ற ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் நாட்டில் விடுமுறை நாளாகும். இருப்பினும், தேர்தலில் குறைவான வாக்குகள் பதிவாகியிருப்பது வேட்பாளர்கள் தங்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்ற வாக்காளர்களின் அக்கறையின்மையை பிரதிபலிக்கிறது. செல்லாத வாக்குகளை செலுத்திய வாக்காளர்கள், தாங்கள் தற்போதைய அதிபரை (இமானுவேல் மக்ரோன்) தண்டிப்பதற்காக அவ்வாறு செய்ததாக தெரிவித்தனர்.




தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளாத மக்ரோனுக்கு எதிரான போராட்டக்காரர்கள், பல்வேறு நகரங்களில் குறிப்பாக பாரிஸ், ரென்ஸ், டௌலௌஸ் மற்றும் நான்டெஸ் ஆகிய நகரங்களில் பேரணிகளை நடத்தினர்.

### "செல்லாத வாக்குகள் அடங்கிய கடலில் தத்தளிக்கிறார்"

தன்னுடைய வெற்றி உரையில் 44 வயதான மக்ரோன், "அதிபரை தேர்ந்தெடுக்க விரும்பாத அவர்களின் தேர்வு குறித்து" தன்னுடைய அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும் என தெரிவித்தார்.

லீ பென் மற்றும் மக்ரோன் இருவரையும் கடுமையாக விமர்சித்தார் தீவிர இடதுசாரி தலைவரான ஜேன் - லூச் மெலெஞ்சன். முதல் சுற்று வாக்குப் பதிவில் லீ பென்னைவிட மயிரிழை அளவு குறைவான வாக்குகளைப் பெற்றார் இவர்.

மெரைன் லீ பென் மீது பிரான்ஸ் நம்பிக்கை வைக்க மறுத்திருப்பது நல்ல செய்திதான் எனக் கூறிய அவர், மற்ற எந்த அதிபரையும் விட மக்ரோன் மோசமான வழியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். "புறக்கணிப்புகள், செல்லாத வாக்குகள் கடலில் அவர் தத்தளிக்கிறார்" என அவர் தெரிவித்தார்.

### அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் சொல்வது என்ன?

தீவிர வலதுசாரி வேட்பாளர் வெற்றி பெற்றால் ஐரோப்பிய ஒன்றிய கொள்கைகளுக்கு எதிரான சூழல் ஏற்படும் என அச்சத்தில் இருந்த ஐரோப்பிய தலைவர்கள் மக்ரோன் வெற்றி மூலம் நிம்மதியடைந்துள்ளனர். அவருடைய வெற்றியை வரவேற்றுள்ளனர்.

ஜெர்மன் அதிபர் ஒலாப் ஷோட்ஸ், மக்ரோனுக்கு வாழ்த்து தெரிவித்த முதல் தலைவராவார். யுக்ரேன் மீதான ரஷ்ய போருக்கு எதிர்வினையாற்றுவதில் இரு நாடுகளின் முன்னுள்ள பரஸ்பர சவால்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுக்ரேன் உள்ளிட்ட விவகாரங்களில் "நெருக்கமான ஒத்துழைப்பை" தான் எதிர்நோக்குவதாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த போரில் மக்ரோன் ராஜீய ரீதியில் முக்கிய பங்கை வகித்த நிலையில், ரஷ்யாவுடனான உறவுகள் குறித்த புகார்களை வெளிக்கொண்டு வருவதில் மெரைன் லீ பென் இடர்ப்பாடுகளை சந்தித்தார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சனும் மக்ரோன் வெற்றியை வரவேற்றுள்ளார்.

மக்ரோன் சாம்ப்ஸ் டி மார்ஸில் தனது வெற்றி உரைக்காக பிரெஞ்சுப் புரட்சியில் இருந்து மிகவும் அடையாளமான இடத்தைத் தேர்ந்தெடுத்தார்.

### வாழ்க்கை செலவு அதிகரிக்கும் நிலையில்

ஐரோப்பிய ஒன்றிய கீதமான Ode to Joy இசைக்க, அவரது மனைவி பிரிஜிட் மற்றும் குழந்தைகள் அடங்கிய குழுவை வழிநடத்திச் சென்ற மக்ரோன், "யாரும் தனித்து விடப்படமாட்டார்கள்" என ஆதரவாளர்களுக்கு உறுதியளித்தார். தனக்கு வாக்களித்தவர்கள் குறித்து பேசிய மக்ரோன், தான் அவர்களுக்கு கடமைப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதிகமான வாழ்க்கைச் செலவு பிரச்னை மில்லியன் கணக்கிலான பிரான்ஸ் மக்களை பாதித்துவருகிறது. இந்த விவகாரம், தேர்தல் பிரசாரத்தில் முதல் பிரச்னையாக இருந்தது. அதிபர் இமானுவல் மக்ரோன், பணக்காரர்களின் அதிபராக செயல்படுவதாக, அவருடைய போட்டியாளர்கள் குற்றம்சாட்டினர்.

எனினும், "பல பிளவுகள் மற்றும் புரிதல் இல்லாமை" உள்ளிட்ட பல நெருக்கடிகளை பிரான்ஸ் சந்தித்துக் கொண்டிருக்கையில், அதிபராக அவர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டிருப்பது வலுவான செய்தியை அளிப்பதாக, பிரெஞ்சு ரேடியோவில் பேசிய அந்நாட்டு பிரதமர் ஜேன் கேஸ்டெக்ஸ் தெரிவித்தார்.

வரும் ஜூன் மாதத்தில் நாடாளுமன்ற தேர்தல்களை எதிர்கொள்வது, பிரான்ஸ் அரசியல் தலைவர்களின் அடுத்தகட்ட பணியாக உள்ளது. மக்ரோனுக்கு இப்போதைக்கு பெரும்பான்மை இருந்தாலும், முதல் சுற்றில் தோல்வியடைந்த வேட்பாளர்கள் ஏற்கெனவே புதிய பிரசாரத்தை முன்னெடுத்துள்ளனர். 63வீத வாக்காளர்கள் மக்ரோன் தனது பெரும்பான்மையை இழக்க விரும்புவதாக ஒரு கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது.

அது நடந்தால், அவர் மற்ற கட்சிகள் தலைமையிலான அரசாங்கத்துடன் "இணைந்து செயல்படும்" நிலைமைக்குத் தள்ளப்படுவார்.

பிரதமரின் மையவாதக் கட்சியைத் தோற்கடித்து பிரதமராகும் வாய்ப்பை தீவிர இடதுசாரி தலைவரான ஜேன் - லூச் மெலெஞ்சன் ஏற்கெனவே பெற்றுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை தன் உரையில், "போட்டி முழுவதுமாக முடிவடையவில்லை" என ஆதரவாளர்களிடையே உரையாற்றுகையில் லீ பென் தெரிவித்தார். முழுமையான அதிகாரத்தை மக்ரோன் தக்க வைப்பத்தில் உள்ள சவால்கள் அதிகம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். **[பிபிசி]**

# ஒற்றையாட்சி அரசமைப்பை 13ஆம் திருத்தம் பாதிக்காது!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

**எம். மணிகண்டன்**

**நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடி, ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால திட்டம், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் அளித்த நேர்காணல் முழுமையாக வெளியாகிறது.**



**கேள்வி:** இந்த நெருக்கடிக்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:** இது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. தற்போதைய நிர்வாகம், கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி, மற்றும் பாராளுமன்றத்தில் இருக்கும் அவரின் கூட்டாளிகள் இந்த சிக்கலை உருவாக்கியிருக்கிறார்கள். இப்போது இலங்கை ஒரு பேரழிவு நிலையை சந்தித்து வருகிறது.

**கேள்வி:** இந்த அரசை அகற்ற உங்களது திட்டம் என்ன?

**பதில்:** அரசியல் சாசனம் பரிந்துரைக்கும் அத்தனை ஜனநாயக முறைகளையும் நாங்கள் கையாள்வோம் - மக்களின் அதிகார நிலைத்திருப்புக்காக தெருவில் போராடும் மக்கள் முழுமையான மாற்றங்களைக் கோருகிறார்கள். ஆட்சி மாற்றம் - அரசாங்க மாற்றம் -அவர்கள் ஜனாதிபதியை வீட்டுக்கு போகச் சொல்கிறார்கள் -அவரின் குடும்பத்தை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். எங்கள் செயல்களின் மூலம், சட்டப்பூர்வமான முறைகளின் மூலம், நாங்கள் அவர்களின் கருத்தைப் பிரதிபலிப்போம்.

**கேள்வி:** என்னென்ன வழிமுறைகள் உங்களிடம் உள்ளன?

**பதில்:** பல உள்ளன. மிக ஆற்றல்மிக்க செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, பாராளுமன்றத்தின் மற்ற உறுப்பினர்களுடன் நாங்கள் பேசி வருகிறோம். பல வழிமுறைகள் உள்ளன.

**கேள்வி:** பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, குற்றப் பிரேரணையோ கொண்டு வருவீர்களா?

**பதில்:** குற்றப் பிரேரணை, நம்பிக்கையில்லா தீர்மானம், நிர்வாக ஜனாதிபதித்துவத்தை ஒழிப்பது போன்ற புதிய கருத்துக்களை முன்னெடுப்பது, 20ஆம் சட்ட திருத்தத்தை திரும்பப்பெற்று, 19ஆவதைக் கொண்டு வருவது போன்ற பல வழிகளில் நாங்கள் செயலாற்றுவதைப் பரிந்துரைக்கிறோம். ஆனால், தற்போதைக்கு பாராளுமன்றத்தின் மற்ற உறுப்பினர்களோடு எங்களை விவாதிக்க விடுங்கள். அதன்பிறகு எங்கள் செயல்முறையைத் தெளிவாகச் சொல்கிறோம்.

**கேள்வி:** நம்பிக்கையில்லா தீர்மானத்தில் நீங்கள் தோல்வி அடைந்தால், அதை ஏற்றுக்கொள்வீர்களா? அப்போது அடுத்த கட்ட திட்டம் என்னவாக இருக்கும்?

**பதில்:** முதலில், நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம். நாங்கள் வெல்வோம் - தொடர்வோம் என்று நினைக்கிறோம். ஒரு பேச்சுக்காக, எங்களுக்கு எண்ணிக்கை கிடைக்கவில்லையென்றால், அதை தோல்வி என்று எப்படி சொல்ல முடியும்? சுயநலம்மிக்க, நாட்டை சூறையாடிய ஓர் அரசியல் தலைமையை இன்னும் ஆதரிக்கும் உறுப்பினர்களுடைய தோல்வி. நீங்கள் சொல்வது போல நாங்கள் வெல்லாவிட்டால், அது எங்கள் தோல்வியல்ல, அது மக்கள் மனநிலையோடு ஒத்துப் போகும் முடிவை எடுக்கும் தைரியமற்ற மற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் தோல்வி.

காலிமுகத் திடலில் இருக்கும் இளைஞர்களும், பொது சமூகமும், பெரும்பான்மையான குடிமக்கள், மாற்றத்துக்காக ஏங்குகிறார்கள் - பதற்றத்துடன் காத்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் அதற்கான விளைவுகளை சந்திக்க வேண்டும். "இந்த அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரித்தால், அடுத்த தேர்தலில் போட்டியிடாதீர்கள்" என்ற வாசகம் இப்போது சொல்லப்படுகிறது. இலங்கையில் மக்கள் அதிகாரமே கோலோச்சுகிறது, மக்கள் அதிகாரமே இலங்கையில் தலையெழுத்தை முடிவு செய்யும்.

**கேள்வி:** பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களுமே இந்த நெருக்கடிக்குக் காரணம் என்று பல போராட்டக்காரர்கள் சொல்கிறார்கள். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** அதை நான் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன். ஏனெனில், மக்கள்தான் இந்த ஜனாதிபதியையும் இந்த சட்டத்தையும் தேர்ந்தெடுத்தார்கள். மேலிருந்து யாரும் அவர்களை முன்மொழியவில்லை. இந்தப் பாராளுமன்றமும் இந்த ஜனாதிபதியும் கடவுளின் கொடை அல்ல. ஜனநாயக சக்திகள் முடிவு செய்தன. இவை இந்த நாட்டை ஆளச் சிறந்தவை என்று, மக்களை தவறாக வழிநடத்தியவர்கள், பிரகடனத்தை மீறியவர்கள், மக்களின் விருப்பத்திற்கு எதிராக நடந்தவர்கள் - அவர்களே இதற்குக் காரணம்.

நிச்சயமாக நான் இதற்குப் பொறுப்பேற்க விரும்பவில்லை. ஏனெனில், நாங்கள் ஒரு புதிய கட்சி. பெப்ரவரி 2020இல்தான் நாங்கள் கட்சியைப் பதிவு செய்தோம். நாங்கள் ஒரு புதிய பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். அனைவருக்கும் செழிப்பைக் கொண்டுவரும் கொள்கையால் வழிநடத்தப்படும் பயணம் - ஒரு சிலருக்கோ, ஓர் அரசியல் குடும்பத்தினருக்கோ அல்ல. எங்களிடம் புதிய சிந்தனைகள் உள்ளன. நவீன பார்வை உள்ளது. இலங்கையை புனரமைப்போம். அனைவருக்கும் செழிப்பு என்பதை நிஜமாக்குவோம்.

**கேள்வி:** நாட்டை ஆளும் பொறுப்பு கிடைத்தால், உங்களது திட்டம் என்னவாக இருக்கும்?

**பதில்:** மக்கள் அந்த பொறுப்பை எனக்குத் தர வேண்டும். அரசியல் பேரத்தில் ஈடுபட நான் விரும்பவில்லை. அது ஜென் ஸி (Gen Z - 1990களின் பிற்பகுதியில் தொடங்கி புதிய நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகள் வரை பிறந்தவர்கள்) இளைஞர்கள், நாட்டின் பெரும்பான்மை மக்கள் மற்றும் ஆயிரக்கணக்கில் தெருவுக்கு வந்து இந்த ஆட்சியின் வீழ்ச்சியைக் கோரும் மக்களுடைய விருப்பத்துக்கு எதிரானது. என் தாய்நட்டின் மக்களுடைய விருப்பத்திற்கு எதிரான எவ்வித அரசியல் ஒப்பந்தத்திலும் நான் ஈடுபட மாட்டேன்.

**கேள்வி:** தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற நீங்கள் எதற்கு முன்னுரிமை அளிப்பீர்கள்?

**பதில்:** முதலும் முக்கியமுமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை (Executive presidential system) மாற்ற வேண்டும். நிச்சயமாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர்கூட இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்வோம். கண்காணிப்புகள் இருப்பதை உறுதி செய்வோம், ஒற்றைப்படையாக முடிவுகள் எடுக்கும் முறையை எதிர்ப்போம்.

உண்மை, தரவுகள், அறிவியல் இவை சார்ந்த முடிவெடுத்தல் முறையை, நிபுணர்களின் கருத்தைக் கேட்டு முடிவெடுக்கும் முறையை, அனைத்தையும் உள்ளடக்கிய முடிவெடுத்தல் முறையை, சரியான ஆலோசனை, ஒருமித்த கருத்துடன்... கொள்கை முடிவுகளில்... இந்த நாட்டின் தற்போதைய குழப்பம், தலையாட்டியே பழக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களால், ஜனாதிபதியின் முன் அடிமைபட்டுக் கிடப்பவர்களால் உருவானது.

அத்தகைய பழமைவாத, மேட்டிமைத்தனமான முடிவெடுத்தல் முறையை ஒழித்துவிட்டு நவீன முறைக்கு, ஜனநாயகத்துக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும். போதுமான அளவு ஜனநாயகமே இந்த நாட்டு மக்கள் சந்தித்து வரும் துயரத்தைப் போக்கும் முதற்படி.

**கேள்வி:** நாட்டை மீட்க சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இது பலனளிக்கும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** பலனளிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சரியான கொள்கைகளை நான் ஆதரிப்பேன். ஆனால், அரசாங்கம் சரியான கொள்கைகளை பின்பற்றவில்லை. வேண்டுமென்றே இந்த நாட்டை அவர்கள் ஒரு குழப்பமான நிலைக்கு இட்டுச் சென்றுள் ளார்கள். தவணைகளை நிறுத்தி வைக்கவும் தள்ளிவைக்கவும் முயற்சிக்க வேண்டும். நமது இரு தரப்பு, பலதரப்பு கூட்டாளிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். நமது கடன் பத்திரங்களை வைத்திருப்போருடனும் பேச்சு நடத்த வேண்டும்.

**கேள்வி:** இந்த நெருக்கடியில் இந்தியாவின் பங்கு என்னவாக இருக்க வேண்டும்?

**பதில்:** இலங்கைக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவும்படி இந்திய அரசின் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறேன். மேலும் இந்தியாவின் வரிசெலுத்துவோரால் தரப்படும் உதவி, மக்களின் நலனுக்குப் பயன்படுவதை உறுதி செய்யுமாறு கூறியிருக்கிறேன். அத்தகைய நன்கொடையும் உதவியும் ஆளும் வர்க்கத்திடம், ராஜபக்ஷ குடும்பத்திடம் திசை மாறிச் சென்றுவிடக்கூடாது என்று கூறியிருக்கிறேன். தரப்படும் நன்கொடையும் உதவியும் இலங்கை மக்களின் நலனை உறுதி செய்ய வேண்டும்.

**கேள்வி:** இலங்கையின் இந்தச் சிக்கலை அண்மை நாடுகள் சாதகமாக எடுத்துக் கொள்கின்றன என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** இந்த யதார்த்த அரசியல் உலகத்தில் எந்தவொரு நாடும் தனது தேசிய நலனை அடையவே முயலும். இலங்கையை ஆண்டுவரும் நிர்வாகங்கள் தேசிய நலனை முன்னிறுத்தாமல் குடும்ப நலனை முன்னிறுத்தியிருக்கின்றன. மற்ற நாடுகள் தேசிய நலனை முன்னிறுத்தியிருக்கின்றன. இந்த அதிகார விளையாட்டில், இந்த யதார்த்த அரசியல் உலகில், மாகியவலியின் கருத்துக்கள் ஜீவித்து இருக்கின்றன என்று நினைக்கிறேன்.

ஒவ்வொரு நாடும் தங்கள் நலனுக்காக வேலை செய்யும். அதைத்தான் இலங்கை செய்ய வேண்டும், அதைத்தான் நான் செய்வேன் - மக்கள் ஒரு வாய்ப்பு கொடுத்தால். நிர்வாகத்தில் எனக்கு முதன்மையான உந்துதலாக இருக்கப்போவது இலங்கையின் தேசிய நலனை முன்னெடுத்துச் செல்வது. இலங்கையை சர்வதேசிய நாடாக்க, உள்நாட்டு, வெளிநாட்டு அதிர்ச்சிகளால் பாதிக்கப்படாமல் இருக்க, நாங்கள் யதார்த்த அரசியல் போக்கை கையாள்வோம். தாய்நாட்டை மீட்டெடுப்போம், அனைவருக்கும் செழிப்பை வழங்குவோம். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி. பகிர்ந்த செழிப்பு - இதுவே எங்கள் கொள்கை மேடைகளில் ஒளிரும் தீப்பந்தம்.

மற்ற நாடுகளின் மீதான சார்பை குறைப்பதையும் உறுதி செய்வோம். ஏற்றுமதி சந்தையை பல்வகைபடுத்தவும், அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்ற எந்த துறையிலும் ஒப்பீட்டளவில் இலங்கையின் நலனை முன்னெடுப்போம். இதையே சஜித் பிரேமதாஸ கூட்டணி செய்யும்.

**கேள்வி:** நீங்கள் இந்தியாவை விட சீனாவையே நாடுவதாக கருத்துக்கள் உள்ளன. இது உண்மையா?

**பதில்:** இது நாடுகளுக்கிடையே உள்ள உறவுகள் குறித்த குழந்தைத்தனமான பார்வை. நாங்கள் எங்கள் தாய்நாட்டுக்கு மதிப்பளிக்கும் நாடுகளுடன் மிகவும் நேர்மறையான, உறுதியான, பலமான உறவை நிலைநாட்டுவோம். எங்களின் சர்வதேச உறவுகள் குறித்த நோக்கத்தில் இதுவே முதன்மையாக இருக்கும். பரஸ்பர நன்மை, பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர ஒத்துழைப்பு, இறையாண்மை ஆகியவையே எங்களின் வெளியுறவுக் கொள்கைகளின் அடிப்படைகள். மேலும், அனைத்து நாடுகளுடன் இணைந்து செயல்படுவதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். அதை நாம் செய்ய வேண்டும். இலங்கையின் நட்பு நாடு இந்தியா. அவர்களின் செயல்பாடுகள் மூலம் அவர்கள் எங்களுக்கு உதவ விரும்புகிறார்கள் என்று நிரூபித்துள்ளனர். இந்திய பிரதமர் நரேந்திர மோடி எங்களுக்கு மேலும் உதவ வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். ஆனால், மக்களுக்கு நேரடியாக இந்த உதவிகள் சென்றடையும் வழிமுறைகளையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கூறுவேன்.

**கேள்வி:** 13-ஆவது சட்டதிருத்தம் குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** நாங்கள் 13-ஆவது சட்டதிருத்தத்தை ஆதரிக்கிறோம். அந்த சட்டதிருத்தம் எதுவாக இருக்கிறதோ, அதை அவ்வாறே ஆதரிக்கிறோம். கவலைப்படாதீர்கள். நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றும் பேசுபவர்கள் அல்லர். நாங்கள் எங்கள் கொள்கையை தீவிரமாக கடைப்பிடிப்பவர்கள். எங்களின் அரசியலமைப்பின் ஒற்றையாட்சி தன்மையை 13ஆவது சட்டதிருத்தம் பாதிக்காது. இதை உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. என் தந்தையும் 13ஆவது சட்டதிருத்தை ஆதரித்தார். அவரது மகனாகிய நானும் அதையே தான் செய்வேன்.

**கேள்வி:** 13ஆவது சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவீர்கள், அப்படித்தானே?


**பதில்:** நாங்கள் 13ஆவது சட்டதிருத்தம் தற்போது எவ்வாறு இருக்கிறதோ, அதை அப்படியே அமுல்படுத்துவோம்.

**நன்றி - பி. பி. சி. தமிழ்**

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........  ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6  2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130  2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 1l 100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190  2) 100  3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2

---

கல்வி tv CHANNEL-1

**27.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**27.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்குக்கு வருகிறார் சீன தூதுவர்!

கொழும்பு, ஏப். 27

கிழக்கு மாகாணத்துக்கு அடுத்த மாதம் பயணம் செய்யவுள்ளதாக இலங்கைக்கான சீன தூதுவர் கியூ சென் ஹொங் தெரிவித்துள்ளார்.

அண்மையில், வடக்கு மாகாணத்துக்கு சென்றபோது வடக்கிலுள்ள தமிழ் மக்களின் அரவணைப்பையும் விருந்தோம்பலையும் கண்டதாகக் கூறிய அவர், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற கிழக்கு மக்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து தனக்கு நிறைய அழைப்புக்கள் கிடைத்துள்ளன, அடுத்த மாதம் அங்கு பயணம் செய்ய உள்ளேன் - என்றார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கிரானில் கைதானோர் விடுதலை!

வாழைச்சேனை, ஏப். 27

**மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டித்தமைக்காக பயங்கரவாத தடைச் சட் டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பை சேர்ந்த 10 பேரும் அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.**

மட்டக்களப்பு கிரான் கடற்கரையில் கடந்த வருடம் மே 18 முள்ளிவாய்க்கால் படுகொலையின் நினைவேந்தலை நினைவுகூர்ந்தமை தொடர்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 10 பேரையும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விடுதலை செய்தது.

வடக்கு, கிழக்கு முன்னேற்றகழக தலைவர் வி. லவக்குமார் தலைமையில் கடந்த மே 18 ம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை கிரான் கடற்கரையில் சுடர் ஏற்றி நினைவுகூர்ந்தனர்.

இந்த நினைவேந்தலை நினைவுகூர்ந்த வடக்கு, கிழக்கு முன்னேற்ற கழக தலைவர் வி. லவக்குமார் உட்பட 10 பேரை கல்குடா பொலிஸார் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 பேரும் கடந்த டிசெம்பர் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இவர்களுக்கு எதிரான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன் போது, சட்டமா அதிபரின் ஆலாசனையின் பேரில் அனைவரும் விடுதலை செய்தார் நீதிவான். (ஐ)

# இன நல்லுறவை மேம்படுத்த ஆலையடிவேம்பில் இப்தார்!



அக்கரைப்பற்று, ஏப். 27

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் இன நல்லுறவை வலுப்படுத்தும் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இஸ்லாமிய சகோதரர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் வி. பபாகரன் உதவிப் பிரதேச செயலாளர் ஆர். சுபாகர் மேலதிக மாவட்ட பதிவாளர் எம். எஸ். எம். உவைஸ் பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என். கிருபாகரன் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. பி. ராஜஸ்ரீ கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பரிமள வாணி சில்வெஸ்டர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நோன்பின் முக்கியத்துவம் பற்றி மார்க்க சொற்பொழிவை அபிவிருத்தி உத்தியோகத்தர் யு. கே. ஜமால் முஹம்மட் மதனி வழங்கினார். அபிவிருத்தி உத்தியோகத்தர் இஸ்லாஹி ஏ.ஜி.அப்துல் றவூவ் அதானை ஒலிக்கச் செய்தமையைத் தொடர்ந்து நோன்பு திறக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வருடந்தோறும் இடம்பெறும் இந்நிகழ்வானது இன நல்லுறவை வலுப்படுத்தும் வகையிலும் பல் சமய நிகழ்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்பு:

# சாராவின் உடல்பாகங்களை தோண்டி எடுப்பதற்கு முடிவு

கொழும்பு, ஏப். 27

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்தாரி மொஹமட் ஹஸ்துனின் மனைவியான சாரா ஜெஸ்மின் என்று அழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரனின் உடற்பாகங்கள், உடற்கூற்று பரிசோதனைக்காக இன்று புதன்கிழமை தோண்டியெடுக்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை பொலிஸ் திணைக்கள தலைமையகம் நேற்று அறிவித்தது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமின் சகோதரரான மொஹொமட் ரில்வான் என்பவரினால் அம்பாறை சாய்ந்தமருது பிரதேசத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் வயோதிபர்கள், சிறுவர்கள் உள்ளடங்கலாக 17 பேர் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் சாரா ஜெஸ்மினும் உள்ளடங்குகின்றார் என்று அறிவிக்கப்பட்டபோதிலும் இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்நிலையிலேயே, மீண்டும் உடற்பாகங்களை தோண்டி எடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இதற்கான அனுமதி கல்முனை நீதிமன்றில் பெறப்பட்டுள்ளது.

இதற்காமைவாக இன்று காலை அம்பாறை பொதுமயானத்தில் புதைக்கப்பட்டுள்ள உடற்பாகங்கள் அம்பாறை நீதிவான் முன்னிலையில் தோண்டி எடுக்கப்படவுள்ளன. (ஐ)

# அம்பாறையில் எஸ். ரி. எவ்வினர் விசேட கண்காணிப்பு பணியில்!



அம்பாறை, ஏப். 27

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வீதி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை, பெரியநீலாவணை, கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு ரோந்து நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திடீர் சோதனையின் போது சந்தேகத்துக்கு இடமானவர்கள் கண்காணிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (ஐ)

# கரையோரப் பாதுகாப்பு தொடர்பில் காரைதீவில் நேற்று கலந்துரையாடல்!



காரைதீவு, ஏப். 27

காரைதீவு பிரதேச சபைக் குட்பட்ட கரையோரப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் முகமாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று நேற்று காரைதீவு பிரதேசசபை மண்டபத்தில் பிரதேசசபை தவிசாளர் கி. ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி, கடல்சார் திணைக்கள அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலக கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர், பிரதேசசபைச் செய லாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், விடயத்துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலை மேற்பார்வையாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கரையோரச் சுத்தம் சம்பந்தமாகப் பல விடயங்கள் ஆராயப்பட்டன. குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற சட்டத்துக்கு முரணான செயல்பாடுகள் குறித்தும் அவற்றை தடுக்கும் முகமான விடயங்கள் குறித்தும் தவிசாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

மேற்படி, கலந்துரையாடலில் முக்கியமாக கலந்து கொண்டிருக்க வேண்டிய சுற்றுச்சூழல் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் கலந்து கொள்ளாமையால் பல விடயங்களை செயல்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும், அனைத்து துறைசார்ந்த அதிகாரிகளும் இவ்விடயங்கள் தொடர்பாக அக்கறையுடன் செயல்பட்டு சுற்றுச் சூழலையும், இயற்கை வளங்களையும் பாதுகாத்து, வளமான காரைதீவு பிரதேசத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் - தவிசாளர் தெரிவித்தார். (ஐ)

# உச்சத்தை தொட்டது உலகின் படை செலவு

## 72,450,000 கோடி ரூபாயை தொட்டது

**ஸ்டாக்ஹோம், ஏப். 27**

**கடந்த 2021ஆம் ஆண்டு நிலவரப்படி உலகின் இராணுவச் செலவுகள் 2 இலட்சத்து 10 ஆயிரம் கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 7 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவை எட்டியுள்ளது. இது, இதுவரை கண்டிராத உச்சபட்ச செலவு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



ஸ்டாக்ஹோமை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சர்வதேச அமைதி ஆய்வு மையத்தின் அறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு உலகில் இராணுவத்துகாக அதிகமாக செலவு செய்த நாடுகளில் அமெரிக்கா முதலிடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன. 4 மற்றும் 5ஆம் இடங்களை முறையே பிரிட்டனும், ரஷ்யாவும் பிடித்துள்ளன.

இந்த ஐந்து நாடுகளும் மட்டும் உலகின் ஒட்டுமொத்த இராணுவ செலவினங்களில் 68 வீதத்தை உள்ளடக்கியுள்ளன.

கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையின்போதும் கூட உலக அளவில் இராணுவத்துக்கான செலவு, வரலாற்று சாதனை படைத்துள்ளதாக சர்வதேச அமைதி ஆய்வு மையத்தின் பணிப்பாளர் டியாகோ லோபெஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், உலகளவில் பணவீக்கப் பிரச்னையால் பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்தபோதும்கூட இராணுவத்திற்கான செலவு 6.1 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2020 இல் இராணுவ செலவு உலக மொத்த தேசிய உற்பத்தியில் 2.2 சதவீதமாக இருந்த நிலையில், 2021இல் அது 2.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்கா 2021இல் 80 ஆயிரத்து 100 கோடி அமெரிக்க டொலர்களை இராணுவ மேம்பாட்டுக்காக செலவு செய்துள்ளது. அதுவும் குறிப்பாக இராணுவ ஆராய்ச்சி, மேம்பாட்டுக்கு மட்டும் 24 வீத தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. ஆயுத கொள்முதலுக்கான நிதி ஒதுக்கீடு 6.4 சதவீதம் ஆகக் குறைந்துள்ளது.

இதே காலக்கட்டத்தில் சீனா 29 ஆயிரத்து 300 கோடி அமெரிக்க டொலர்களை இராணுவ செலவீனத்துக்காக ஒதுக்கியுள்ளது. இது 2020-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.7 சதவீதம் அதிகமாகும்.

மூன்றாவது இடத்தில் உள்ள இந்தியா 7 ஆயிரத்து 660 கோடி அமெரிக்க டொலர்களை செலவு செய்துள்ளது. 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இராணுவத்துக்கான செலவை இந்தியா 0.9 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியா உள்நாட்டு இராணுவத் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் பலப்படுத்தும் விதமாக 2021 பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 64 சதவீதத்தை உள்நாட்டு இராணுவ தயாரிப்புகளை வாங்க செலவழித்துள்ளது. (ஐ)

# பீஜிங்கில் தொற்று உயர்வு; உணவுக்கும் தட்டுப்பாடு!



பீஜிங், ஏப். 27

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கொரோனா தொற்று உயர்ந்து வருகின்றது. ஷங்காய் நகரைப் போன்று அங்கும் ஊரடங்கு விதிக்கப்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் உணவுப் பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்ததால் அந்த நகரத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சீனாவின் வுஹான் நகரில் கொரோனா தொற்று பரவ ஆரம்பித்து உலகம் முழுவதும் பரவியது. இந்நிலையில், தொற்றை தடுக்க சீனா 333 கோடி டோஸ் தடுப்பூசிகளை மக்களுக்கு செலுத்தியுள்ளது. அந்த நாட்டில் 88.3 சதவீதம் பேர் தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

இந்நிலையில், சீனாவின் வர்த்தக நகரமான ஷங்காயில் அண்மையில் கொரோனா தொற்று பரவ ஆரம்பித்தது. அங்கு நாள்தோறும் 2,500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து அந்த நகரில் ஊரடங்கு விதிக்கப்பட்டது. கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு அதிக அபராதமும் தண்டனையும் விதிக்கப்படுகின்றது.

இந்நிலையில், பீஜிங்கிலும் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. எனவே, இங்கும் ஊரடங்கு விதிக்கப்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் அதிகளவில் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால், பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ)

# காலநிலை மாற்றத்தால் மலேரியா பரவும் அபாயம்!

ஜெனிவா, ஏப். 27

காலநிலை மாற்றத்தால் இதுவரை மலேரியா நோய் இல்லாத நாடுகளுக்கு கூட புதிதாக மலேரியா நோய் பரவ வாய்ப்பு உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

மேலும், காலநிலை மாற்றம் என்பது மலேரியா நோய் பரவலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், அதைத் தடுக்க வேண்டும் புதிய முயற்சிகளை பயன் படுத்த வேண்டும் எனவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள் ளது.

உலகில் பல கொடூர நோய்களுக்கு இதுவரை தடுப்பூசி கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நோய்களில் ஒன்றுதான் மலேரியா. உலக சுகாதார ஸ்தாபனத்தின் தகவல்படி ஒவ்வோர் ஆண்டும் 24.1 கோடி பேர் மலேரியா நோயால் பாதிக்கப்படுகின்றனர். 6.27 இலட்சம் மரணங்கள் பதிவாகின்றன.

குறிப்பாக ஆபிரிக்கா நாடுகளில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மலேரியா நோயால் அதிக அளவு மரண மடைகின்றனர். இதைக் கட்டுப்படுத்த முதல் மலேரியா தடுப்பூசிக்கு கடந்த 2021ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தா பனம் அனுமதி அளித்தது. 2019ஆம் ஆண்டு சோதனை முறையில் செயல்படுத்தபட்ட இந்த தடுப்பூசி கடந்த ஆண்டு பொதுப் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. (ஐ)

# பனிக்கட்டிகளுக்கு கீழே 295 அடி ஆழத்தில் நீச்சல்!



கேப்டவுன், ஏப். 27

பெண் ஒருவர், பனிக்கட்டிகளுக்கு அடியில் 295 அடி 3 அங்குலம் ஆழத்தில் நீச்சலடித்து புதிய கின்னஸ் சாதனை படைத்திருக்கிறார்.

தென்னாபிரிக்காவை சேர்ந்த அம்பெர் பிலாரி என்ற பெண்ணே இரண்டாவது தடவையாக இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

பனிக்கட்டிகளுக்கு அடியில் 295 அடி ஆழத்தில் நீச்சலடித்த இவர், இரண்டு வருடங்களுக்கு முன்னர் 229.7 அடி ஆழத்தில் நீச்சல் அடித்தார். இந்த சாதனையையே அவர் தற்போது முறியடித்துள்ளார்.

பனிக்கட்டிகளுக்கு அடியில் நீச்சலடித்தபோது இவர் உயிர்காப்பு வாயுவையோ அல்லது வேறு எந்த உதவு கருவிகளையோ பயன்படுத்தவில்லை என்பதே இவரின் சிறப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அணுவாயுதங்களை அதிகரிப்போம் வடகொரிய தலைவர் அறிவிப்பு!



பியோங்யோங், ஏப். 27

நாட்டின் அணுவாயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப்போவதாக வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன் தனது படைகளுக்கு மத்தியில் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் ஆயுதப் படை கட்டமைக்கப்பட்டு 90ஆவது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நடந்த இராணுவ அணிவகுப்பில் பங்கேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அணிவகுப்பில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா அந்த நாட்டின் மீதான தடைகளை மேலும் அதிகரித்தது.

இந்நிலையில், படை அணிவகுப்பில் பேசிய கிம் ஜோங் உன், வடகொரியாவின் அணு ஆயுதங்கள் அடிப்படையில் போருக்கு எதிரான ஒரு தடுப்புக் கருவியாகும். ஆனால், மற்ற வழிகளுக்கு பயன்படுத்தப்படலாம். தாக்கப்பட்டல் நாடு திருப்பித் தாக்கும் என்ற பழைய சொற்களை அவர் மீண்டும் பயன்படுத்தினார். (ஐ)

### பஞ்சாப்புடன் தோல்வி!

# இறுதிச் சுற்று வாய்ப்பை இழக்கின்றது சென்னை?




மும்பை, ஏப். 27

பஞ்சாப் கிங்ஸூக்கு எதிரான போட்டியில் 11 ஓட்டங்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தோல்வியடைந்தது. இதனால், நடப்பு சம்பியனான அந்த அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறுவது மிகவும் கடினமாகியுள்ளது.

ஐ. பி. எல் தொடரில் 38 ஆவது போட்டியில் நேற்று முன்தினம் இரவு மும்பையில் நடந்தது. இதில், பஞ்சாப் கிங்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதியிருந்தன.

188 ஓட்டங்கள் இலக்கை நோக்கி இனிங்ஸை தொடங்கிய சென்னை அணிக்கு தொடக்க வீரர்கள் இந்தமுறையும் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. இரண்டாவது ஓவரிலேயே உத்தப்பா ஓர் ஓட்டத்துடன் பெவிலியனுக்கு நடையைக் கட்டினார். அடுத்து இறங்கிய சான்ட்னர், ஷிவம் துபே ஒற்றை வரிசை இலக்க ஓட்டங்களோடு வெளியேறினர். பின்னர் ருதுராஜ் கெய்க்வாடும் அம்பதி ராயுடுவும் கூட்டணி சேர்ந்தனர்.

வழக்கத்துக்கு மாறாக, அம்பதி ராயுடு களமிறங்கியது முதலே அதிரடியாக விளையாடினார். தொடக்க வீரரான ருதுராஜ் கெய்க்வாட் 30 ஓட்டங்கள் எடுக்க முன்னதாக, ராயுடு 30 ஓட்டங்களை தாண்டி சேர்த்தார். சிறிதுநேரத்தில் கெய்க்வாட் 30 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ராயுடு ஒற்றை நபராக பஞ்சாப் பந்துவீச்சை துவம்சம் செய்தார். 6 சிக்ஸர்களை விளாசிய அவர், குறிப்பாக சந்தீப் சர்மா வீசிய 16ஆவது ஓவரில் மட்டும் ஹாட்ரிக் சிக்ஸர் மற்றும் ஒரு பௌண்ட்ரி அடித்து ருத்ரதாண்டவம் ஆடினார். எனினும், ரபாடா வீசிய 18ஆவது ஓவரில் யோர்க்கர் பந்தில் “போல்ட்” ஆகி 78 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

12 பந்துகளில் 35 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது டோனி களம் புகுந்தார். இதனால் ஆட்டத்தில் சுவாரசியம் கூடியது. கடந்த போட்டியில் இறுதி ஓவரில் அணியை வெற்றிபெற வைத்த அவர்மீது எதிர்பார்ப்பு கூடியது. அதற்கேற்ப 19ஆவது ஓவரில் டோனி ஒரு பௌண்ட்ரி அடிக்க, கடைசி 6 பந்துகளில் 27 ஓட்டங்கள் தேவைப்பட, ரிஷி தவான் வீசிய முதல் பந்தை சிக்ஸராக பறக்கவிட்ட அவர், மூன்றாவது பந்தில் சிக்ஸர் அடிக்க முயன்று பிடியெடுப்பாகி ஆட்டமிழந்தார்.

டோனி 12 ஓட்டங்களில் வெளியேறியதும் பஞ்சாப் ரசிகர்களும் அணியினரும் நிம்மதி அடைந்தனர். 20 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 6 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 11 ஓட்டங்களில் தோல்வி அடைந்தது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ஜடேஜா 21 ஓட்டங்கள் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் ரபாடா, ரிஷி தவான் தலா இரண்டு விக்கெட்கள் எடுத்தனர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்றிருந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் ஜடேஜா, களத்தடுப்பைத் தெரிவு செய்திருந்தார்.

இதனால், முதலில் பஞ்சாப் அணி துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் தலைவர் மயங்க் அகர்வால் மற்றும் ஷிகர் தவான் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். மயங்க் 21 பந்துகளில் 18 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார். தொடர்ந்து பானுக ராஜபக்ஷ துடுப்பெடுத்தாட வந்தார்.

தவான் மற்றும் ராஜபக்ஷ இணை 110 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டத்தை அமைத்தனர். கடந்த சில போட்டிகளாக இது மாதிரியான ஓர் இணைப்பாட்டத்தை அமைக்க முடியாமல் தான் தடுமாறி வந்தது பஞ்சாப். ராஜபக்ஷ 32 பந்துகளை எதிர்கொண்டு 42 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மறு முனையில் விளையாடிய தவான் 59 பந்துகளில் 88 ஓட்டங்கள் எடுத்தார். இறுதி வரை அவர் ஆட்டமிழக்காமல் விளையாடினார்.

லிவிங்ஸ்டன், தன் பங்கிற்கு 7 பந்துகளில் 19 ஓட்டங்கள் சேர்த்தார். பெயர்ஸ்ரோ 6 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட் ஆனார். 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 187 ஓட்டங்கள் எடுத்திருந்தது பஞ்சாப் அணி.

சென்னை அணி சார்பில் பந்துவீசிய பிராவோ 2 விக்கெட்களையும், மகேஷ் தீக்சன ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## தாமதத்தால் ராகுலுக்கு சிக்கல்!



மும்பை, ஏப். 27

மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் பந்துவீச நீண்ட நேரம் எடுத்துக்கொண்டமைக்காக லக்னோ அணியின் தலைவர் கே. எல். ராகுலுக்கு 24 இலட்சம் இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் நடந்த இந்தப் போட்டியில் லக்னோ அணி பந்துவீசுவதற்கு அதிக நேரம் எடுத்தது. இதையடுத்தே அந்த அணியின் தலைவரான ராகுலுக்கு 24 இலட்சம் இந்திய ரூபாயும், விளையாடிய வீரர்களுக்கு 6 இலட்சம் இந்திய ரூபாயும் (அல்லது 25சூ ஊதியம்) அபராதமும் விதிக்கப்பட்டதாக ஐ. பி. எல். நிர்வாகம் அறிவித்தது.

இது ராகுலுக்கு விதிக்கப்பட்ட இரண்டாவது அபராதமாகும். இதற்கு முன்பும் மும்பை அணிக்கு எதிரான போட்டியில் பந்துவீச்சு தாமதத்துக்காக அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்நிலையில், இன்னோர் போட்டியில் பந்துவீச தாமதமானால் அவருக்கு ஒரு போட்டி தடை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஸ்டுட்கார்ட் ரென்னிஸ் ஸ்வியாரெக் சம்பியன்!



ஸ்டுட்கார்ட், ஏப். 27

ஜேர்மனியில் நடைபெற்ற ஸ்டுட்கார்ட் ரென்னிஸ் போட்டியில் போலந்தின் இகா ஸ்வியாரெக் சம்பியனானார்.

உலகின் முதல்நிலை வீராங்கனையான அவர், இறுதிச்சுற்றில் 6-2, 6-2 என்ற நேர் செற்களில் பெலாரஸின் அரினா சபலென்காவை தோற்கடித்தார்.

இந்தப் போட்டியில் முதன் முறையாக களம் கண்டபோதே சம்பியனாகி அசத்தியிருக்கிறார் ஸ்வியாரெக்.

இது நடப்பு ஆண்டில் அவரின் நான்காவது அவரின் நான்காவது சம்பியன் பட்டமாகும். முன்னதாக டோஹா, இந்தியன்வெல்ஸ், மியாமி ஓப்பன்களிலும் அவர் சம்பியனாகியிருந்தார். (ஐ)

## மொயின் அலிக்கு காயம்! சென்னைக்கு பின்னடைவு




மும்பை, ஏப். 27

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மொயின் அலிக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் அடுத்த சில போட்டிகளில் அவரால் விளையாட முடியாது. இது சென்னை அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது.

இந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் நடப்பு சம்பியனான சென்னை மிக மோசமாக விளையாடுகின்றது. 8 போட்டிகளில் 2 வெற்றிகளையே பெற்றுள்ளது. புள்ளி பட்டியலில் 9ஆவது இடத்தில் அந்த அணி உள்ளது.

இந்நிலையில், சகலதுறை வீரர் மொயின் அலிக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. பயிற்சியின்போது அவருடைய கணுக்காலில் காயம் ஏற்பட்டதால் சென்னை அணியின் அடுத்த சில போட்டிகளில் விளையாட மாட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. காயம் காரணமாக சென்னை அணியின் அணியைச் சேர்ந்த தீபக் சஹார், அடம் மில்ன் ஆகியோர் ஏற்கெனவே போட்டியிலிருந்து விலகியுள்ளார்கள். தற்போது மொயின் அலியும் விளையாட முடியாதுள்ளது. இது அந்த அணிக்கு மேலும் பாதிப்பைக் கொடுக்கும். (ஐ)

## ஐ. பி. எல்லில் தவான் புதிய மைல்கல்!



மும்பை, ஏப். 27

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் 6,000 ஓட்டங்களை கடந்த இரண்டாவது துடுப்பாட்ட வீரர் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார் ஷிகர் தவான். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியின்போது இந்தச் சாதனையை அவர் படைத்தார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார் இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான். இந்த தொடரில் 8 போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் இரண்டு அரைச்சதங்களை பதிவு செய்துள்ளார். இதுவரையில் 202 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடியுள்ளார். டில்லி, மும்பை, டெக்கான் சார்ஜர்ஸ், ஹைதராபாத், டில்லி கப்பிட்டல்ஸ், பஞ்சாப் என வெவ்வேறு அணிகளுக்காக தவான் விளையாடியுள்ளார்.

இதன் மூலம், 6,000 ஓட்டங்களைக் கடந்துள்ளார். சென்னை அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவர் 59 பந்துகளில் 88 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை அவர் ஆட்டமிழக்காமல் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வீரர் விராட் கோலி 215 போட்டிகள் விளையாடி 6,402 ஓட்டங்களை எடுத்து ஐ. பி. எல். அரங்கில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (ஐ)



## ஜனாதிபதி செயலகம் முன்பாக சவப்பெட்டி எரித்து போராட்டம்

கொழும்பு, ஏப். 27

அரசாங்கத்திற்கு எதிராக ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் 17ஆவது நாளாக தொடர்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்கள் உடன் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக சவப்பெட்டி மற்றும் மலர் வளையம் ஆகியவற்றை கொண்டு வந்தனர்.

அண்மையில் றம்புக்கனை பகுதியில் இடம்பெற்ற அரச எரிப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சமிந்த லக்ஷானின் நினைவாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சவப்பெட்டிக்கு தீ வைத்த போராட்டகாரர்கள், உயிரிழந்த நபருக்கு நீதி கோரி போராட்டம் நடத்தினர். (அ)

# பெரும்பான்மை பலம் பெரமுனவின் வசமே!

## நிரூபித்து காட்டத் தயார் என்கிறார் சாகர காரியவசம்

**கொழும்பு, ஏப். 27**

**பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இன்னும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் வசமே இருப்பதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை எந்த நேரத்தில் நிரூபித்துக் காட்ட தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

வேறு அணியினருக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருக்குமாயின், ஊடக சந்திப்புகளை நடத்திக் கதைகளைக் கூறாது அதனை பாராளுமன்றத்தில் நிரூபித்துக் காட்டவேண்டும் எனவும் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அதேவேளை, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் 124 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கூறினார்.

அவர்கள் ஏற்கனவே பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கான தமது ஆதரவை எழுத்து மூலம் வழங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, தீர்மானத்துக்கு ஆதரவளிக்க 113 க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இணங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

அத்துடன் அரசாங்கத்தில் இருந்து விலகி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் 41 பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளனர். (அ)

## இலங்கைக்கு அவசர உதவியை வழங்குவதற்கு இத்தாலி தயார்

கொழும்பு, ஏப். 27

மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ,இலங்கை அரசாங்கத்துக்கு ,ஒரு தொகை நிதியை அவசர உதவியாக வழங்க இத்தாலி முன்வந்துள்ளது.

இதற்கமைவாக இலங்கைக்கு 125 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளதாக கொழும்பிலுள்ள இத்தாலி தூதரகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின், இத்தாலிய இருதரப்பு அவசர நிதியம் மூலம் ,இந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படுவதாக கொழும்பிலுள்ள இத்தாலி தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விநியோக வலைப்பின்னல் முகாமைத்துவ செயல்முறையின் கீழ், சுகாதார அமைச்சினால் பெறுகை நடைமுறைக்கு ஏற்ப வெளிநாடுகளில் உள்ள விநியோகப் பிரிவின் ஊடாக நேரடியாக பணம் செலுத்த அனுமதிக்கப்படும் என்று இத்தாலிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## குற்றச்செயல்களுடன் தொடர்புள்ள பலர் நாட்டை விட்டுத் தப்பி ஓடுவதற்கு திட்டம்

கொழும்பு, ஏப். 27

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பலர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக புலனாய்வுப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் பாரியளவிலான ஊழல் மோசடிகள், மனிதப் படுகொலைகள் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் இவ்வாறு நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்பட்டு வந்த சந்தேக நபர்களே இவ்வாறு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டால் இந்த குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக் கூடும் என்ற காரணத்தினால் இவ்வாறு நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக கூறப்படுகின்றது.

இவ்வாறு நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிக்கும் நபர்களுக்கு இடையில் தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய அரசியல்வாதிகளுடன் மிக நெருக்கமாக செயற்பட்டு வரும் நபர்கள் உள்ளடங்குவதாக புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர்.

பல்வேறு மோசடிகளின் மூலம் பல கோடி ரூபா பணம் சம்பாதித்து கொண்டவர்கள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கின்றனர் புலனாய்வுப் பிரிவினை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

## விலை அதிகரிக்காமல் விநியோகம் இல்லை!

### லிட்ரோ நிறுவனம் அதிரடி

கொழும்பு, ஏப். 27

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முக்கிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

அதன்படி சமையல் எரிவாயு விலைகளை அதிகரிக்காமல் எரிவாயு விநியோகிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் முடிவெடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரொன்றின் விலையானது 5,175 ரூபாவாக அதிகரிக்கப்படுவதாக கடந்த 22ஆம் திகதி லிட்ரோ நிறுவனம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் லிட்ரோ நிறுவன எரிவாயு விலை அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அதன்படி எரிவாயு விலை அதிகரிக்கப்படாது எனவும் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் பழைய விலைக்கே 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே குறித்த அறிவிப்பை லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ளது. (அ)

## சீனாவிடமிருந்து மற்றுமொரு கடன்

கொழும்பு, ஏப். 27

சீனாவினால் மற்றுமொரு கடனுதவி வழங்க முன்மொழியப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்த அமைச்சர், இலங்கையில் தற்போது நிலவும் கடன் நெருக்கடிக்கு தீர்வாகக் கடனை மறுசீரமைப்பது சிக்கலாக இருப்பதால் சீனா இந்த முடிவை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

சீனா ஏற்கனவே உலகின் பல்வேறு நாடுகளுக்கு கடனை வழங்கியுள்ள நிலையில், ஒரு நாட்டுக்கு மட்டும் கடனை மறுசீரமைப்பது நெருக்கடியை ஏற்படுத்தும் என்று சீனா கருதுவதாக அவர் கூறினார்.

## விசேடமான துறையினருக்கு தனியாக எரிபொருள் இறக்குமதி செய்ய அனுமதி!

கொழும்பு, ஏப். 27

பொருளாதார செயன்முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விசேடமான துறைகள், தமக்குத் தேவையான எரிபொருட்களை தனித்தனியாக இறக்குமதி செய்து பயன்படுத்த அனுமதிக்கும் வகையில், பெற்றோலிய சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நாட்டின் சகல பொருளாதார நடவடிக்கைகளுக்கும் எரிபொருள் இன்றியமையாதது என்பதன் அடிப்படையில், குறிப்பிட்ட துறைகளுக்கு மாத்திரம் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும், தனித்தனியாகப் பயன்படுத்துவதற்கும் உரிமம் வழங்குவது பொருத்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதிக்காக முறையான வகையில் அடையாளம் காணப்படும் தரப்பினர்களுக்கு உரிமங்களை வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக, 2002 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றை உருவாக்குவதற்கு, சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (அ)

## 13ஆவது திருத்த...

“அந்த சட்டதிருத்தம் எதுவாக இருக் கிறதோ, அதை அவ்வாறே ஆதரிக்கி றோம். கவலைப்படாதீர்கள். நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றும் பேசுபவர்கள் அல்லர்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பி.பி.சி. தமிழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் 13 ஆவது சட்டத் திருத் தத்தை ஆதரிப்பதாகக் கூறிய சஜித், “நாங்கள் இரட்டை நாக்கு கொண்ட வர்கள் அல்லர்” என்றும் குறிப்பிட்டார்.

“அந்த சட்டத் திருத்தம் எதுவாக இருக்கிறதோ, அதை அவ்வாறே ஆதரிக் கிறோம். கவலைப்படாதீர்கள். நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல் லர். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றும் பேசு பவர்கள் அல்லர். நாங்கள் எங்கள் கொள் கையை தீவிரமாக கடைப்பிடிப்பவர்கள். எங்களின் அரசியலமைப்பின் ஒற்றை யாட்சித் தன்மையை 13ஆவது சட்டத் திருத்தம் பாதிக்காது. இதை உயர் நீதி மன்றம் தீர்மானித்தது. என் தந்தையும் 13ஆவது சட்டத்திருத்தை ஆதரித்தார். அவரது மகனாகிய நானும் அதையே தான் செய்வேன்.” என்றும் சஜித் கூறி னார்.

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை உடன்பாட்டின்படி 13 ஆவது சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனி னும் மாகாண சபைகளுக்கு பொலிஸ், நிதி போன்ற அதிகாரங்களை வழங்கு வதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வரு கிறது. தமிழ் அரசியல் கட்சிகள் இந்தச் சட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ)

## நாட்டின்...

இதுவே வறுமை விகிதத்தை 11.7 சத விகிதமாக உயர்த்தி யது.

உலக வங்கியின் ஏப்ரல் 2022 இன் இலங்கைக்கான நுண்ணிய வறுமைக் கண்ணோட்டத்தின் புதுப்பிப்பின்படி, உயர்த்தப்பட்ட வரிகள் மற்றும் வெளி இடர்பாடுகள் மற்றும் சவாலான அரசி யல் சூழ்நிலை ஆகியவை பொருளாதாரக் கண்ணோட்டத்தில் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடு 2022 மற்றும் அதற்கு அப்பால் வெளிப்புற நிதி இடைவெளியை எதிர்கொள்கிறது என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை அதன் பாதிப்புகளின் கட்டமைப்புக்களை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இதற்கு குறிப்பாக உள்நாட்டு வரு வாய் திரட்டலை வலுப்படுத்துவதன் மூலம் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும்

பணவீக்கத்தின் மீதான அழுத்தங்க ளைக் கட்டுப்படுத்த நிதி ஒருங்கிணைப்பு இறுக்கமான பணவியல் கொள்கையுடன் தேவைப்பட்டாலும், உலகளாவிய வளர்ச்சி கடன் வழங்குபவர், கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான சாத்தியமான விடயங்களை இலங்கை கண்டறியவேண்டும் என்றும் உலக வங்கி பரிந்துரைத்துள்ளது.

இதன் மூலமே ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான தாக்கங்களைக் குறைக்கமுடியும் என்று உலக வங்கி வலியுறுத்தியுள்ளது. (அ)

## பஸ் - மோட்டார்...

உடுத்துறை வடக்கு - தாளையடியை சேர்ந்த ஞானசீலன் தவமலர் (வயது 60) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பளை பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

பளை பொலிஸார் மேலதிக விசார ணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ-2)

## நீதி அமைச்சராகவும்...

முன்னர் இருந்த அமைச்சரவையில் அவர் நீதி அமைச்சராக பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



## நான் பதவி...

அத்தியாவசிய தேவைகளுக்கான வரிசைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பொருளாதாரமும் நாட்டின் தேசிய பாதுகாப்பும் பாதிக்கப்பட்டிருந்த நிலை யிலேயே கடந்த அரசாங்கம் நாட்டை தம்மிடம் ஒப்படைத்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளை ஒவ்வொன் றாகத் தீர்த்து வருவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பிரதருக்கும் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றியத்துக்கும் இடை யிலான சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றபோதே பிரதமர் இவற்றைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியமும் நட்பு நாடுகளும் இலங்கைக்கு உதவ தயாரா கவுள்ளதாகவும் பிரதமர் மஹிந்த தெரி வித்தார்.

எரிபொருள், எரிவாயு, மின்சாரம், மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவை கள் தொடர்பில் நிலவும் பிரச்னை களுக்கு விரைவில் தீர்வு வழங்க வேண் டும் எனவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே, பிரதமர் மஹிந்த அல்லது அரசாங்கம் இராஜினாமா செய்ய வேண்டிய அவசியம் இல்லை என மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றியம் ஏகமனதாக இதன்போது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு பதில் வழங்கியுள்ள பிரதமர், தாம் இராஜினாமா செய்யப்போவ தில்லை எனவும் பயப்படவேண்டாம் எனவும் தெரிவித்தார் என அந்த அறிக்கை யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

## தயவு செய்து...

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புத் தாக் குதலில் பலியான மற்றும் உயிர் பிழைத் தவர்களின் குடும்பங்களின் பிரதிநிதிகள் உட்பட இத்தாலியில் பணிபுரியும் சுமார் 3,500 இலங்கை கத்தோலிக்கர்கள் மத்தியில் பாப்பரசர் உரையாற்றினார்.

வத்திக்கானில் உள்ள சென். பீற்றர்ஸ் பசிலிக்கா பேராலயத்தில், இலங்கைக் குழுவினர் முன் உரையாற்றிய பாப்பரசர் பிரான்ஸிஸ், 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தில் விதைக்கப்பட்ட சோக நிகழ்வு களின் ஆண்டு நிறைவைக் குறிக்க கூடியி ருப்பதாக குறிப்பிட்டார்

இலங்கையில் ஏற்பட்ட இந்த இறப் புக்கள் மற்றும் பயங்கரவாதம் என்று அவர் தெரிவித்தார்.

எனவே தயவுசெய்து, நீதியின் மீதுள்ள அன்பினால், உங்கள் மக்கள் மீதான அன் பினால், இந்த நிகழ்வுகளுக்கு யார் கார ணம் என்பதை ஒருமுறை தெளிவுபடுத் துங்கள் என்று இலங்கை அதிகாரிகளி டம் அவர் விநயமாகக் கேட்டுக்கொண் டார்.

இதுவே “இது உங்கள் மனசாட்சிக் கும் உங்கள் நாட்டுக்கும் அமைதியைத் தரும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 1948 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியில் இருந்து சுதந் திரம் பெற்ற இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார பின்ன டைவு ஏற்பட்டுள்ளதையும் பாப்பரசர் சுட்டிக்காட்டினார். (அ)

# கோட்டாபய பதவி விலகும் வரை இடைக்கால அரசை ஆதரியோம்!

## அனுரகுமார திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

“கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் நீடிக்கும்வரை இடைக்கால அரசுக்கு ஜே.வி.பி. இணங்காது.” - என்று அதன் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க நேற்று அறிவித்தார்.

”ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வும், இந்த அரசும் பதவி விலகவேண்டும். இதுதான் மக்களின் கோரிக்கை. எமது நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது .

அவர்கள் பதவி விலகிய பின்னர் குறுகில காலப்பகுதிக்கு இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும். அதன்



பின்னர் பொதுத்தேர்தலுக்கு செல்ல வேண்டும். ” - என்றும் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உரிய பாதுகாப்பை வழங்குக!

## மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு, ஏப். 27

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு போதுமான பாதுகாப்பு வழங்குமாறு இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழு பொலிஸாருக்கு பரிந் துரை செய்துள்ளது.

கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடு வதற்கான உரிமை ஆகியவற்றை பாது காப்பது போலவே, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு போதுமான பாதுகாப்பை யும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றினூடாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளது. (அ)

# ராஜபக்ஷக்களுடன் தொடர்பு கிடையாது!

## உகண்டா நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

இலங்கையின் ராஜபக்ஷ குடும்பத் தினரிடம் இருந்தோ அல்லது அந்த நாட் டின் அரசியல்வாதிகளிடம் இருந்தோ, முதலீடுகள் எதனையும் பெற வில்லை என்று உகண்டாவின் செரினிட்டி குழுமம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் செரினிட்டி குழுமம் ஊடகங் களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதன் நிறுவுனர்கள், செயல்பாடுகள் மற்றும் வணிக விவரங்கள் குறித்து சமூக ஊடகங்களில் கூறப்படும் குற்றச்சாட்டு கள் குறித்து இதில் குழுமம் தெளிவுபடுத் தியுள்ளது.

அந்த அறிக்கையில்-

இந்த நிலையில் இலங்கையின் ராஜ பக்ஷ குடும்பத் துடன் எமது நிறுவனத் தின் வணிக முயற்சியை இணைக்கும் கருத்துப்பகிர்வுகளை அடுத்து, இலங்கையின் பொதுமக்களிடையே தவறான கருத்துக்கள் தோன்றி யுள்ளன.

எனவே இந்த கருத்துக்களில் இருந்து எமது பெயரை நீக்குவதற்கு செரினிட்டி குழுமம், சட்ட ஆலோசனையை நாடி யுள்ளது.

உகண்டாவில் உள்ள செரினிட்டி குழுமத்தின் நிறு வனங்களில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளதாக சமூக ஊடகங்களில் பகிர்வுகள் இடப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் பல இலங்கையர்கள் மற்றும் உகண்டா நாட்டவர்களுக்கு எமது நிறுவனம் வேலை வாய்ப்பை வழங்கியது.

அத்துடன் நாட்டுக்கு நிலையான வெளிநாட்டுப் பணம் அனுப்புவதன் மூலம் எமது நிறுவனம் பெருமை யுடன் தொடர்ந்து இலங்கைக்கு ஆதரவளிக்கும் - என்றுள்ளது.

பணிப்பாளர்களான ருவன் ஜயரத்ன மற்றும் தேவக ஏகநாயக்க ஆகியோரின் வர்த்தக ஆர்வத்தின் அடிப்படையில் செரினிட்டி குழுமம் உகண்டாவில் ஸ்தாபிக் கப்பட்டதாக அந்த அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தின் போது முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிறுவனத் துக்கு சென்றிருந்தார். (அ)

## உண்மைகளை...

அரசாங்கத்தின் ஒரே குறைபாடு தொடர் பாடல் இல்லாததுதான் என்றும் அமைச் சர் கூறினார்.

எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு உண்மைகளை உடனுக்கு உடன் வழங்கு வோம் என நம்புவதாகவும் அமைச்சர வைப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## கோட்டாவுக்கு...

எந்த அடிப்படையில் அரச தலைவர் பதவியில் இருந்து நீக்குவது என்பது தொடர்பாக உயர் நீதிமன்றம் விசா ரணை செய்ய வேண்டும். குற்றச்சாட்டுக் கள் சரி என்று உயர் நீதிமன்றம் கண்டு அறிந்தால், பதவி நீக்கப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பதவி நீக்கப் பிரேரணையை நிறை வேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் வாக் கெடுப்பு நடத்தப்படவேண்டும். ஆனால் அதனை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை.

எனவே, அரச தலைவருக்கு எதிரான குற்றப் பிரேரணையை நிறைவேற்ற ஒரு வருடத்திற்கும் மேலாக ஆகலாம்-என் றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# அதிபர்கள், ஆசிரியர்கள் நாளை மீண்டும் சுகயீனலீவு போராட்டம்

கொழும்பு, ஏப். 27

அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் நாளை சுகயீன விடுமுறை அறிவித்து பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் உருவெடுத்து நீண்டு செல்லும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினால் அனைத்து வேலை செய்யும் மக்கள் உட்பட அனைத்து இலங்கையரும் மோசமான பிரச்னைகள் பலவற்றுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளமையை கூறி தெளிவு படுத்தவேண்டிய அவசியமில்லை. இத் துர்ப்பாக்கிய நிலைக்கு காரணம் ஜனாதிபதி கோட்டாபய உட்பட தற்போதைய முழு அரசாங்கமே எனக்கூறி மக்கள் நாடு முழுவதும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

அரசு ஊழியர்களில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட அதிபர், ஆசிரியர் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் இருப்பதுடன் அவர்கள் சேவைக்கு சமூகம் அளித்தல், சேவை தளத்திலிருந்து வீடு செல்லல் அத்துடன் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றபோது போக்குவரத்திற்கான எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் மற்றும் அரசு மற்றும் தனியார் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை போன்ற பல்வேறு பிரச்னைகள் எழுந்துள்ளமை தொடர்பாக 2022.04.20 திகதி தங்களுக்கு கடிதம் மூலமாக அறியப் படுத்தியும் அதற்கான தீர்வு கிடைக்காமையினால் ஏப்ரல் 25ஆம் திகதி சுகயீன விடுமுறை போராட்டத்தை மேற்கொள்ளவேண்டிய நிலை அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்புக்கு நேர்ந்தது. ஆயினும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல், பொருளாதார நெருக்கடியை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய உட்பட முழு அரசாங்கத்தையும் பதவி விலக கோரி அரச, அரச ஆதிக்கம் உடைய நிறுவனம் மற்றும் தனியார், பெருந்தோட்டம் உட்பட சகல துறையைச் சேர்ந்த வேலை செய்யும் அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணைந்து நாளை பாரிய தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

அதற்கமைய அதிபர், ஆசிரியர் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் நாளை வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக அதன் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் கல்வி அமைச்சின் செயலருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கூட்டமைப்பின் மே தினம் மட்டக்களப்பில் ஏற்பாடுகள்!

மட்டக்களப்பு, ஏப். 27

தமிழ் தேசிய கூட்ட மைப்பின் மே தினக்கூட் டம் மே எழுச்சி நாளான எதிர் வரும் மே முதலாம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

கல்லடி பாலத்துக்கு அருகில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி மீனிசை பூங்கா திடலை அடைந்து அங்கு மேடை நிகழ்வுகள் நடைபெறும். இந்த நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கிளை கள் இணைந்து நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஏற்பாட்டு கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட தலை வர் பொ. செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் இதில் பங்கேற்றனர்.

மே தின ஒழுங்கமைப்பு ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி. சரவணபவன் தலைமை தாங்குவார். அத்துடன், மாநகர உறுப்பினர்கள் அவருக்கு துணை நிற்பர். அத்துடன், மட்டக்களப்பின் பல தொழில் சங்கங் களும் இந்த மே தின நிகழ்வில் பங் கேற்கும்.

இந்த நிகழ்வில், தொழிலாளர்களுக்கான உரிமைகளுக்காக குரல் எழுப்பப் படும் அதேசமயம் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, மின்சாரத்தடை, எரிபொருள் தட்டுப்பாடு, சகல விதமான பொருட்களுக்கான விலை ஏற்றங்களை கண்டித்தும் கடைப்பிடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 12 - 1968



மறைவு 25 - 04 - 2022

### திருமதி சிவநாதன் ஜீவரஞ்சினி

யாழ். புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் KKS Road ஐ வசிப்பிடமாகவும், தற்போது கனடா Newmarket ஐ வாழ்விடமாகவும் கொண்ட சிவநாதன் ஜீவரஞ்சினி அவர்கள் 25.04.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் (PTK Ratnam), சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும்,சிவநாதன் அவர்களின் ஆருயிர் மனைவியும்,பவித்தா, நிவேதா, பிரணவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ஜீவராணி, அம்பிகா தேவி, யசோரதி, செந்தில்ரூபன், தருமரூபன், காலஞ்சென்ற ஜெகரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரநாதன், கௌரிகாந்தன், சிவராசா, சிவதர்சினி, காயத்திரி, சண்முகநாதன், சிவலிங்கநாதன், மங்கயற்கரசி, காலஞ்சென்ற யோகநாதன், திருலிங்கநாதன், இலங்கநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**இலங்கநாதன் - மைத்துனர்**
**Mobile : +16477732277**

தகவல்:
**குடும்பத்தினர்**

## விஸா வழங்குவதில் புதிய பொறிமுறை

### ஜனாதிபதியின் யோசனைக்கு அனுமதி

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்த நீண்டகால வதிவிட விஸா வழங்கும் பொறிமுறைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றுக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பொறிமுறையின் கீழ் குறிப்பிட்ட நீண்டகால வதிவிட விஸா வழங்குதல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் இயக்குநர்களுக்கு, அவர்களுடைய துணைவருக்கும் தங்கி வாழ்பவர்களுக்கும் அவ்வாறு முதலிடுகின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்ட கால வதிவிட விஸா வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரமளிக்கப் பட்ட வணிக வங்கியொன்றில் குறைந்தது 100,000 அமெரிக்க டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட விசா வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் "தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித் திட்டம்" எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



மானிப்பாய் பிறைற் விளையாட்டுக் கழகமும் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகமும் வருடாந்தம் மோதும் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் உடுவில் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. அந்த அணியின் தலைவர் கிண்ணத்தை பெறுவதை படத்தில் காணலாம்..!

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு விக்னேஸ்வரன் எம்.பியும் ஆதரவு!

கொழும்பு, ஏப். 27

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

## நாட்டின் பணவீக்கம் மேலும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 27

உலகிலேயே அதிக பணவீக்கமுள்ள நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை இலங்கை பெற்றுள்ளது என்று அமெரிக்காவின் ஜோன் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் தொடர்பான பேராசிரியர் ஸ்டீவ் ஹென்கி தெரிவித்துள்ளார்.

அவர் இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரியில் வெளியிட்ட பணவீக்க பட்டியலில், இலங்கை ஆறாவது இடத்தில் இருந்தது.

பேராசிரியர் ஸ்டீவ் ஹென்றியின் அறிக்கையின்படி இலங்கையில் பணவீக்கம் 17.5 வீதத்திலிருந்து இருந்து 119 வீதமாக அதிகரித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி இலங்கை சிம்பாப்வேக்கும் லெபனானுக்கும் அடுத்த படியாக இருக்கிறது.

சிம்பாப்வேயின் பணவீக்கம் 207 வீதமாகும் , லெபனானின் பணவீக்கம் 150 வீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.